## சிறப்புக் குறிப்பு 15
## முக்கிய பொருளாதாரக் கொள்கை மாற்றங்களும் வழிமுறைகளும் 2016[1]

### நாணயக் கொள்கை

2016 சனவரி 16 - உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் அனைத்து ரூ.வைப்புப் பொறுப்புக்களுக்கு பிரயோகிக்கப்படும் நியதி ஒதுக்கு விகிதம் 1.50 சதவீதப் புள்ளிகளினால் 6.00 சதவீதத்திலிருந்து 7.50 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது.

2016 பெப்புருவரி 19 - துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் என்பன முறையே 6.50 சதவீதம் மற்றும் 8.00 சதவீதத்திற்கு 50 அடிப்படைப் புள்ளிகளினால் அதிகரிக்கப்பட்டது.

2016 யூலை 28 - துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் என்பன முறையே 7.00 சதவீதம் மற்றும் 8.50 சதவீதத்திற்கு 50 அடிப்படைப் புள்ளிகளினால் அதிகரிக்கப்பட்டது.

2017 மாச்சு 24 - துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் என்பன முறையே 7.25 சதவீதம் மற்றும் 8.75 சதவீதத்திற்கு 25 அடிப்படைப் புள்ளிகளினால் அதிகரிக்கப்பட்டது.

### நிதியியல் துறை

### உரிமம் பெற்ற வங்கிகள்

2016 சனவரி 25 - சைபர் பாதுகாப்புடன் சம்பந்தப்பட்ட நிகழ்வுகளின் மீதான தகவல்களை கண்டறியப்பட்ட திகதியிலிருந்து தொழிற்படும் ஒரு அலுவலக நாளுக்குள்ளும் ஒவ்வொரு காலாண்டு முடிவிலிருந்து 15 நாட்களுக்குள்ளும் கண்காணிப்பு நோக்கத்திற்காக இலங்கை மத்திய வங்கியின் வங்கித் தொழில் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு வழங்குவதற்குமாறு அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளுக்கும் அறிவுறுத்தப்பட்டது.

2016 பெப்புருவரி 01 - முறையியல் முக்கியத்துவம் வாய்ந்த கொடுப்பனவு முறையூடாக நடைமுறைப்படுத்தப்பட்ட நிதிய மாற்றங்களுக்காக வாடிக்கையாளர்களிடமிருந்து அறவிடப்பட்ட கட்டணங்களை அனைத்துக் கிளைகளிலும் வங்கியின் இணையத்தளங்களிலும் 2016 பெப்புருவரி 10ஆம் நாளிலிருந்து காட்சிப்படுத்துவதற்கு அனைத்து உரிமம் பெற்ற வங்கிகளும் கேட்டுக்கொள்ளப்பட்டன.

2016 செத்தெம்பர் 01 - 2016 செத்தெம்பர் 15 இல் இருந்து ஆரம்பிக்கின்ற வகையில் ஏனைய வங்கிகள் மற்றும் முதனிலை வணிகர்களுடனும் அனைத்து உடனடி வர்த்தகத்தினையும் மேற்கொள்ளல் மற்றும் கருமபீடத்தில் மேற்கொள்ளப்பட்ட ரூ.50 மில்லியனுக்கு மேற்பட்ட அனைத்து உடனடி வர்த்தகங்களது விளைவு வீதங்களும் வர்த்தக அளவுகளும் ஒவ்வொரு 30 நிமிடங்களுக்குள் அறிக்கையிடல் போன்றவற்றிற்காக இலங்கைக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள புளும்பேர்க் வர்த்தக்கட்டமைப்பினைப் பயன்படுத்துமாறு உரிமம் பெற்ற வங்கிகளைக் கேட்டுக்கொள்ளும் சுற்றறிக்கை ஒன்றினை வழங்குதல்.

2016 திசெம்பர் 29 - உரிமம் பெற்ற வங்கிகள் மொத்த இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்கள் தொடர்பான குறைந்தளவு மூலதன விகிதங்கள் மற்றும் தாங்கியிருப்புக்களை பேணுவதன் தேவைப்பாட்டிற்காக 2017 யூலை 01 இலிருந்து 2016இன் 1ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டப் பணிப்புரைகள் வெளியிடப்பட்டன.

2017 சனவரி 10 - 'உரிமம்பெற்ற வங்கிகளுக்கான பாசல் III முடுக்கி விகித கட்டமைப்பின்' கீழ் ஆலோசனை பத்திரமொன்று வெளியிடப்பட்டது.

2017 சனவரி 13 - 2017 சனவரி 16 இலிருந்து ஊர்திகளின் கொள்வனவு மற்றும் பயன்பாட்டு நோக்கத்திற்காக உரிமம்பெற்ற வங்கிகளினால் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளிற்கான கடன் பெறுமதி விகிதத்தை அறிவிக்கும் முகமாக 2017 இன் 01ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு வெளியிடப்பட்டன.

---

1 2016 காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட முக்கிய பொருளாதார கொள்கை மாற்றங்கள் மற்றும் அளவீடுகளை உள்ளடக்குவதுடன் 2017இன் முதல் மூன்று மாதங்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட மற்றும் கிட்டிய எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட எதிர்பார்க்கும் கொள்கை மாற்றங்கள் மற்றும் அளவீடுகளையும் உள்ளடக்குகின்றது.

| | | |
|---|---|---|
| 2017 பெப்புருவரி 01 | - | 2017 வரவுசெலவுத் திட்டத்தில் அனுமதிக்கப்பட்ட தேசிய கொள்கையினை அறிவிக்கும் பொருட்டு பின்வருவன தொடர்பாக உரிமம்பெற்ற வங்கிகளுக்கு ஒரு சுற்றறிக்கை வெளியிடப்பட்டது.<br>- சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள், ஏற்றுமதிகள், சுற்றுலாத்துறை நடவடிக்கைகள், வேளாண்மை, இளைஞர் மற்றும் யுவதிகள் போன்ற அடையாளங் காணப்பட்ட துறைகளுக்கான வரவு.<br>- வங்கித்தொழில் பணிகளை மேம்படுத்தல். |
| அடுத்துவருபவை | - | உரிமம்பெற்ற வங்கிகளுக்கு முடுக்கிவீதத்தை அறிமுகப்படுத்தல். |
| | - | உரிமம்பெற்ற வங்கிகளுக்கு தேறிய நிலையான நிதியிடல் விகிதத்தை அறிமுகப்படுத்தல். |
| | - | வங்கிப் பரீட்சை முறைகளை மேம்படுத்தல். |

### உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள்

| | | |
|---|---|---|
| 2016 சனவரி 18 | - | உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக் கம்பனிகளின் புதிய கிளைகள் மற்றும் தன்னியக்கக்கூற்றுப் பொறிகளை ஆரம்பித்தல், கிளைகள் மற்றும் பணிநிலையங்களை மூடிவிடுதல் மற்றும் வேறு இடங்களில் அமைத்தல் என்பன தொடர்பில் ஏற்கனவே உள்ள கொள்கைகளையும் நடைமுறைகளையும் வலுப்படுத்தல் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான பணிப்புரைகள் வழங்கப்பட்டன. |
| 2016 ஒத்தோபர் 28 | - | உரிமமளிக்கப்பட்ட நிதிக் கம்பனிகளினால் வழங்கப்படக் கூடிய வைப்புக்கள் மற்றும் படுகடன் சாதனங்கள் மீதான உயர் வட்டி வீதங்கள் தொடர்பான பணிப்புரை திருத்தியமைக்கப்பட்டது. |
| 2017 சனவரி 13 | - | 2017 இற்கான வரவுசெலவுத் திட்ட முன்மொழிவுடன் இசைந்து செல்கின்ற உந்து ஊர்திகளின் கொடுகடன் வசதிகளிற்கான உரிமமளிக்கப்பட்ட நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளுக்கு வெளியிடப்பட்ட பணிப்புரைகள் திருத்தியமைக்கப்பட்டது. |
| 2017 பெப்புருவரி 23 | - | உரிமமளிக்கப்பட்ட நிதிக் கம்பனிகளிற்கான குறைந்தளவு மைய மூலதனத்தினை அதிகரிப்பதற்கான பணிப்புரை தளம்பல் அடிப்படையில் வெளியிடப்பட்டது. |

### காப்புறுதி

| | | |
|---|---|---|
| 2016 சனவரி 01 | - | இலங்கை காப்புறுதி சபையானது அனைத்து காப்புறுதி கம்பனிகளுக்கும் கடன் தீர்ப்பனவற்றால் அளவு (இடர்நேர்வை அடிப்படையாகக் கொண்ட மூலதனம்) ஒழுங்குவிதிகளை வழங்கியது. |
| 2016 சனவரி 04 | - | 50 சதவீதத்திற்கு மேற்பட்ட பங்குகளை சொந்தமாக வைத்திருத்தல் மற்றும் கட்டுப்படுத்தல் என்பனவற்றின் மீதான மாற்றங்களுக்கு இலங்கை காப்புறுதிச் சபையிடமிருந்து ஒப்புதல் பெறுவதற்கு அனைத்து காப்புறுதியாளர்கள் மற்றும் தரகர்களுக்கு காப்புறுதி தொழில்துறைக்கான ஒழுங்குவிதிகள் சட்டத்தின் பகுதி 96அ இன் கீழான அறிவுறுத்தலொன்று இலங்கை காப்புறுதி சபையினால் வழங்கப்பட்டது. |
| 2016 மாச்சு 15 | - | இலங்கை காப்புறுதி சபையானது காப்புறுதியாளர்களின் காப்புறுதியினை ஏற்கும் அறிவித்தலினை 7 நாட்களிலிருந்து 14 நாட்களுக்கு அதிகரித்தது. |
| 2016 ஏப்பிறல் 01 | - | இலங்கைக் காப்புறுதிச் சபையானது கொள்கை ஆவணங்களின் வரையறைகள் மற்றும் நிபந்தனைகளை பரீட்சிப்பதற்கு காப்புறுதியாளர்களிற்கான 21 நாட்கள் இலவச பார்வையிடும் காலத்தினை வழங்குவதற்கு காப்புறுதி தொழில் துறைக்கான ஒழுங்கு விதிகள் சட்டத்தின் 96அ பகுதியின் கீழ் அனைத்து நீண்டகால காப்புறுதி நிறுவனங்களுக்கும் பணிப்புரை ஒன்றை வெளியிட்டது. |
| 2016 மே 26 | - | இலங்கை காப்புறுதி சபையானது 2005ஆம் ஆண்டு ஒழுங்கு விதிகளின் ஒழுங்கு விதி 5 இனை சீர்திருத்துவதன் மூலம், காப்புறுதித் தொழில்துறைக்கான ஒழுங்கு விதிகள் சட்டத்தின் கீழ் ஒரு தரகராக பதிவு செய்யப்படுவதற்கு விருப்பமுடைய ஏதேனும் நபர் ஒருவர், ரூ.2.5 மில்லியன் இற்கு குறையாத கம்பனியின் கூறப்பட்ட மூலதனத்தைக் கொண்டிருத்தல் மற்றும் பேணப்படுதலை வேண்டி நிற்கின்றது. |

2016 செத்தெம்பர் 30 - புதிய காப்புறுதி உற்பத்திகள் உடன் அவ் உற்பத்திகள் அறிமுகப்படுத்தும் திகதி தொடர்பாக அனைத்து காப்புறுதி கம்பனிகளும் இலங்கை காப்புறுதி சபைக்கு தெரியப்படுத்துவதனை இலங்கை காப்புறுதி சபையினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை (இலக்கம் 39) வேண்டி நிற்கின்றது. அதற்கிணங்க, உற்பத்தி அறிமுகப்படுத்துவதற்கு முன்னர் சமர்ப்பித்தல் வேண்டும். இருப்பினும் நீண்ட - தவணைக் காப்புறுதி கம்பனிகள், நிபுணத்துவ சான்றிதழ், கொள்கை ஆவணங்கள் மற்றும் முன்மொழிவு படிவங்களை குறைந்தது உற்பத்தி அறிமுகத்திற்கு 45 நாட்களுக்கு முன் சமர்ப்பித்தல் வேண்டும்.

2016 ஒத்தோபர் 01 - வாடிக்கையாளர்களின் நியாயமான சிகிச்சையை ஒரு நேர முறையில் உறுதிப்படுத்துவதற்கு இலங்கைக் காப்புறுதிச் சபையினால் காப்புறுதியாளர்கள் மற்றும் தரகர்களால் கையாளப்படுகின்ற முறைப்பாடுகள் மீதான வழிகாட்டல்களை வெளியிட்டது.

2016 ஒத்தோபர் 21 - இலங்கை காப்புறுதி சபை கூற்றுக்களின் பெறுமதிக்கு குறையாதவாறு கொள்கையின் பெறுமதியினை ஒப்படைத்தல், இரத்துச் செய்யும் நேரத்தில் கூற்று விலையின் அடிப்படையில் ஏதேனும் காப்புறுதி அறவீடுகளினைக் கழித்தல், பிரயோகிக்கக்கூடிய கொள்கைக் கட்டணங்கள் மற்றும் ஒப்படைத்தல் கட்டணங்கள் உள்ளடங்கலாக நீண்ட கால காப்புறுதி வியாபாரத்துடன் இணைக்கப்பட்டுள்ள வழிகாட்டல்களை திருத்தியது. இடர்நேர்வு கட்டணங்கள் முற்பணமாக நிதியிடப்படும் போது முதலீட்டுடன் தொடர்புடைய உற்பத்தியின் இடர்நேர்வு பங்கிற்கு ஒப்படைக்கப்படும் பெறுமதிகளின் தீர்மானத்தின் மீதான காப்புறுதி தொழில் துறைகளுக்கான ஒழுங்குவிதிகள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படலாம்.

2017 சனவரி 01 - காப்புறுதியாளர்களின் ஆர்வத்தைப் பாதுகாக்கும் அதே வேளையில் தொழில் சார் நிபுணத்துவம் மற்றும் கைத்தொழில் பிரதியின்மை போன்ற நோக்கத்துடன் காப்புறுதிக் கோரல்களின் மீதான புலனாய்வுகளை கொண்டு நடாத்துவற்கான வழிகாட்டல்களை இலங்கை காப்புறுதிச் சபை வெளியிட்டது.

### மூலதனச் சந்தை

2016 சனவரி 01 - பங்கு கொடுக்கல்வாங்கலுக்கான தீர்வை நீக்கப்பட்டது.

2016 ஏப்பிறல் 01 - பங்கு கொடுக்கல்வாங்கல் மீதான தீர்வை 0.3 சதவீதத்திற்கு மீள விதிக்கப்பட்டது.

2016 நவெம்பர் 17 - இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவானது குறைந்தளவு பொது மிதக்கும் தேவைப்பாடுகள் மீதான பணிப்புரைகளை திருத்தியது.

2016 நவெம்பர் 22 - 2017 மாச்சு 01 இலிருந்து நடைமுறைக்கு வரும்வகையில், ரூ.35 மில்லியன் குறைந்த திரவ மூலதனத்திற்குட்பட்டு தொழிற்பாடு, இணைத் தரப்பினர்களின் பாரிய வெளிக்காட்டல் மற்றும் நிலைமை இடர்நேர்வு என்பனவற்றினை கருத்திற்கொண்டு கணிக்கப்பட்ட பங்குத்தரகர் நிறுவனத்தின் மொத்த இடர்நேர்வு தேவைப்பாட்டின் 1.2 மடங்கிலான ஆகக் குறைந்த மூலதன போதுமாந்தன்மை விகிதத்தினை பேணுவதற்கு, பங்கு பரிவர்த்தனை ஆணைக்குழுவானது படுகடன் பிணையங்களில் வர்த்தகம் செய்ய அனுமதியளிக்கப்பட்டவர்கள் விலகலாக அனைத்துப் பங்குத்தரகர்களுக்கும் பணிப்புரைகளை வழங்கியது.

### நுண்பாக நிதி

2016 மே 20 - 2016இன் 6ஆம் இலக்க நுண்பாக நிதிச் சட்டம் இயற்றப்பட்டது;

- நுண்பாக நிதி வியாபாரத்தினை நடாத்தும் கம்பனிகளிற்கு உரிமம் வழங்குதல், ஒழுங்கமைத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்,
- அரச சார்பற்ற நுண்பாக நிதி அமைப்புக்களைப் போன்ற வரையறுக்கப்பட்ட சேமிப்பு வைப்புக்களை ஏற்கும் அரச சார்பற்ற அமைப்புக்களினை பதிவுசெய்தல் மற்றும்
- அரச சார்பற்ற நுண்பாக நிதி அமைப்புக்கள் மற்றும் அரச சார்பற்ற சிறுகடன் அமைப்புக்களின் ஒழுங்கமைத்தல் மற்றும் மேற்பார்வை செய்தலுக்கான விதிமுறைகளை அமைத்தல்.

- நுண்பாக நிதிச் சட்டம் இலங்கை மத்திய வங்கியின் நுண்பாக நிதி நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களத்திற்கு உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளைப் பரீட்சித்து மேற்பார்வை செய்யும் அதிகாரங்களை வழங்கியிருக்கிறது.

### சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் அபிவிருத்தி

| | | |
|---|---|---|
| 2016 சனவரி 07 | - | தேசிய வேளாண்மை வியாபார அபிவிருத்தி செயற்றிட்டத்தின் நுண்பாக நிதியியல் கூறுகளை மீள ஆரம்பிப்பதற்கு நாடு முழுவதும் ரூ.90 மில்லியனை பகிர்ந்தளிப்பதற்காக பங்குபற்றும் நிதியியல் நிறுவனங்களுக்கு தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. |
| 2016 சனவரி 14 | - | வர்த்தக அளவிலான பாற்பண்ணை அபிவிருத்தி கடன்திட்டத்தின் கருணைக் காலமானது செயற்றிட்டத்தின் தேவைப்பாடுகளினடிப்படையில் 06 மாதங்களிலிருந்து 12 மாதங்களிற்கு அதிகரிக்கப்பட்டது. |
| 2016 ஏப்பிறல் 27 | - | சுயதொழில் வாய்ப்பு ஊக்குவிப்பு முயற்சிக்கடன் திட்டம் - கட்டம் II இனை நடைமுறைப்படுத்துவதற்கு பங்குபற்றும் நிதியியல் நிறுவனங்களுக்கு தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. |
| 2016 மே 27 | - | 2016 ஏப்பிறல் 07இலிருந்து அமுலுக்குவரும் வகையில், தேசிய வேளாண்மை வியாபார அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் வருமானத்தை ஈட்டும் நடவடிக்கைகளுக்காக ஒரு தனிப்பட்டவருக்கான கடனின் தகைமை அளவு எல்லையானது ரூ.10,000 இற்கும் ரூ.300,000இற்கும் இடைப்பட்டதாக திருத்தப்பட்டது. |
| 2016 ஓகத்து 03 | - | தேசிய வேளாண்மை வியாபார அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் தொழிற்படுத்தப்பட்ட "தருண திரிய" இளைஞர் மேம்படுத்தல் மற்றும் தொழில்வாய்ப்பு திட்டத்தின் அமுலாக்கத்திற்காக பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. |
| 2016 ஓகத்து 22 | - | 2016 செத்தெம்பர் 15இல் இருந்து நடைமுறைக்கு வரும் வகையில், புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின் கீழ் கரும்பானது ஒரு தகைமையுடைய பயிராக உள்ளடக்கப்படுவதற்கு தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. |
| 2016 ஒத்தோபர் 07 | - | பங்கு பற்றும் நிதியியல் நிறுவனங்களுக்கு தேசிய வேளாண்மை வியாபார அபிவிருத்திச் "செயற்திட்டத்தின் வெளிப்பயிர்ச்செய்கை வேளாண்மையாளர் கடன்" திட்டத்தின் கீழ் "பெறுமதிச் சங்கிலி அபிவிருத்தி மூலதன வேளாண்மைக் கடன் திட்டம்" மற்றும் "பெறுமதிச் சங்கிலி அபிவிருத்தி பருவகால வேளாண்மை கடன் திட்டம்" என்பனவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டது. |
| 2016 திசெம்பர் 20 | - | 2016 ஒத்தோபர் 01இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் தேசிய வேளாண்மை வியாபார அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழான "திருண திரிய" வின் முடிவுத் திகதி 2017 மாச்சு வரை விரிவாக்கப்பட்டது. |
| 2017 பெப்புருவரி 06 | - | வர்த்தக அளவிலான பாற்பண்ணை அபிவிருத்திக் கடன் திட்டத்தின் கீழான கடன் மீள் கொடுப்பனவிற்காக ஆகக்கூடிய காலமானது செயற்திட்டத்தின் தன்மையின் அடிப்படையில் ஆகக்கூடிய கருணைக் காலம் ஒரு ஆண்டு உள்ளடங்கலாக 5 ஆண்டுகளில் இருந்து 6 ஆண்டுகளுக்கு அதிகரிக்கப்பட்டது. |
| 2017 பெப்புருவரி 08 | - | அரசு சார்பாக, "சுவசக்தி - ஒரு மில்லியன் வேலைகளை நோக்கி" என்ற பெயருடைய ஒரு புதிய கடன் திட்டமானது இலங்கை மத்திய வங்கியினால் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சி துறை மற்றும் தொழில்வாய்ப்பு உருவாக்கத்தின் அபிவிருத்திக்காக ஆரம்பிக்கப்பட்டது. |

### தீர்ப்பனவுகள் மற்றும் கொடுப்பனவுகள்

| | | |
|---|---|---|
| அடுத்துவருபவை | - | கொடுப்பனவு சேவைகளை வழங்குவதற்கு நிதியியல் நிறுவனங்களினால் பயன்படுத்தப்பட்ட தொலைபேசிப் பயன்பாடுகளுக்கான நியமங்களை அமைப்பதற்கான வழிகாட்டல்களை வெளியிடல். |

### பணம் தூயதாக்கல்

| | | |
|---|---|---|
| 2016 சனவரி 06 | - | அமைச்சரவையினால் ஒப்புதலளிக்கப்பட்ட பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடலுக்கெதிரான தேசிய கொள்கையொன்று ஏற்றுக்கொள்ளப்பட்டது. |
| 2016 சனவரி 27 | - | 2016இன் 1ஆம் இலக்க நிதியியல் நிறுவனங்கள் ஒழுங்கு விதிகள் (வாடிக்கையாளர்கள் நெருங்கிய கண்ணோட்ட ஒழுங்கு) மீதான 1951/13 இலக்க அதிவிசேட வர்த்தமானி நிதியியல் நிறுவனங்களிற்கு வழங்கப்பட்டது. |

**வெளிநாட்டுச் செலாவணி முகாமைத்துவம்**

| | | |
|---|---|---|
| 2016 சனவரி 20 | - | வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு, வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு, வதியும் இலங்கையரல்லாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு மற்றும் வெளிநாட்டு செலாவணி உழைப்போர் கணக்குகளை வைத்திருப்போருக்கு அத்தகைய கணக்குகளின் நிதியங்களை அனுமதியின்றி ஏதேனும் நோக்கத்திற்காக இலங்கைக்கு வெளியே அனுப்புவதனை அனுமதிக்கும் புதிய பணிப்புரைகள் அதிகாரமளிக்கப்பட்ட முகவர்களுக்கு வழங்கப்பட்டது. |
| | - | ஐ.அ.டொலர் 10,000 வரையான வெளிநாட்டு நாணயம் அல்லது அதற்கு சமமான வேறு ஏதேனும் வெளிநாட்டு நாணயங்களை இலங்கையில் வதியும் தனிநபர்கள் அவனது/ அவளது கையிருப்பில் வைத்திருப்பதனை அனுமதிக்கின்ற புதிய வர்த்தமானி அறிவித்தலொன்று வழங்கப்பட்டுள்ளது. |
| | - | வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு, வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு, வதியும் இலங்கையரல்லாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு மற்றும் வெளிநாட்டு செலாவணி உழைப்போர் கணக்குகளை வைத்திருப்போருக்கு இலங்கைக்கு வெளியே வதியும் ஒரு நபருக்கு ஏதேனும் கொடுப்பனவுகள் மேற்கொள்வதனை அனுமதிக்கும் வகையில் இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டைகள் மீது புதிய வர்த்தமானி அறிவித்தல் ஒன்று வழங்கப்பட்டது. |
| 2016 மாச்சு 11 | - | வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு, வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு, வதியும் இலங்கையரல்லாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு மற்றும் வெளிநாட்டு செலாவணி உழைப்போர் கணக்குகளை வைத்திருப்போர், வெளிநாட்டு நாணயத்தில் வைப்புக்களை ஏற்றுக்கொள்வதற்கு அனுமதியளிக்கப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள், உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள், உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் இரட்டைக் குடியுரிமையுடைய இலங்கையின் பிரசைகள் இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற இலங்கை அபிவிருத்தி முறிகளில் முதலீடு செய்வதனை அனுமதிக்கும் புதிய வர்த்தமானி அறிவித்தல் ஒன்று வழங்கப்பட்டது. |
| 2016 மாச்சு 23 | - | இலங்கை அபிவிருத்தி முறிகளை பெற்றுக் கொள்ளல், வைத்திருத்தல் மற்றும் பரிமாற்றல் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட முகவர் ஒருவரிடமிருந்து ஐக்கிய அமெரிக்க டொலர்களை கொள்வனவு செய்யும் நோக்கங்களிற்காக 'இலங்கை அபிவிருத்தி முறிகள் முதலீட்டுக் கணக்கு' மற்றும் 'முறி முதலீட்டிற்கான டொலர் கணக்கு' என பெயரிடப்பட்ட சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்குகளை ஆரம்பிப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள் மற்றும் இலங்கை அபிவிருத்தி முறிகளிற்கு உத்தியோகபூர்வ முகவர்களாக அனுமதிக்கப்பட்ட முதன்மை வணிகர்களை அனுமதிக்கின்ற பணிப்புரைகள் வழங்கப்பட்டன. |
| 2016 ஏப்பிறல் 01 | - | 1993 மாச்சு 26 திகதியிடப்பட்ட 759/15 இலக்க வர்த்தமானியில் வழங்கப்பட்ட விதிவிலக்கானது நீக்கப்பட்டதுடன் அத்தகைய பொருட்களை ஏற்றுமதி செய்யப்பட்ட திகதியிலிருந்து 90 நாட்களுக்குள் வெளிநாட்டில் கைவசம் வைத்திருக்கும் ஏற்றுமதி நடவடிக்கைகளை நாட்டிற்கு திருப்பியனுப்புவதற்கு ஏற்றுமதியாளர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர். மேலும், 2016 மே 01 இற்கு பின்னர் வெளிநாட்டில் கைவசம் வைத்திருக்கும் ஏதேனும் நடவடிக்கைகளை நாட்டிற்கு திருப்பியனுப்புவதற்கு அத்தகைய பொருட்களின் ஏற்றுமதியாளர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர். |
| 2016 ஏப்பிறல் 19 | - | இராஜதந்திர அதிகாரியின் விசா சேகரிப்பு கட்டணம் மற்றும் இராஜதந்திர அதிகாரிக்கு சொந்தமான வாகன விற்பனையிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட வருமானத்தினை செலாவணிக் கட்டுப்பாட்டாளருக்கு அறிவிக்காது அனுப்புவதற்கும் பிணையங்கள் முதலீட்டு கணக்கினூடாக இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வதற்கும் அனுமதிக்கின்ற இராஜதந்திர வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மற்றும் இராஜதந்திர ரூபா கணக்குகள் மீதான பணிப்புரைகள் அதிகாரமளிக்கப்பட்ட முகவர்களுக்கு வழங்கப்பட்டது. |
| 2016 மே 16 | - | 2013 யூன் 12 இற்கு முன்பு நிரந்தர வதிவிட விசாவினால் இடம்பெயர்ந்த புலம்பெயர்வாளர்கள் தகுதிவாய்ந்த புலம்பெயர் முற்பணங்களிலிருந்து கழிக்கப்படாமல் மற்றும் வட்டி, பங்கிலாபங்கள், ஓய்வூதியம், வாடகை, குத்தகை வருமானம் மற்றும் 2013 யூன் 12 இற்கு பின்பு இலங்கையிலடைந்த இலாபங்கள் மற்றும் சேமலாப நிதி மற்றும் பணிக்கொடை நன்மைகள் உள்ளடங்கலான நடைமுறை வருமானங்கள் உள்ளடங்கலாக ஓய்வூதிய நிதிய நன்மைகளை தங்களுடைய தொடர்பான வதிவற்றோர் தடுத்து வைக்கப்பட்ட கணக்கினூடாக அனுப்புவதற்கு அனுமதிக்கப்பட்டனர். |

| | | |
|---|---|---|
| | - | 2013 யூன் 12 இற்கு பின்பு இன்னொரு நாட்டின் நிரந்தர வதிவுரிமையைப் பெற்றுக்கொண்ட இலங்கையா்களுக்கு இலங்கையில் முதலீடு செய்வதற்காக பிணைய முதலீட்டுக் கணக்கு ஒன்றிற்கு தகுதிவாய்ந்த புலம்பெயர் முற்பணங்கனை மாற்றல் செய்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட முகவர்களுக்கு அனுமதியளிக்கும் வகையில் புலம்பெயர்வாளர்களுக்கான வெளிநாட்டுச் செலாவணி விற்பனை மீதான புதிய பணிப்புரை வழங்கப்பட்டது. |
| 2016 யூன் 07 | - | வெளிநாட்டு மூலங்களிலிருந்து கடன்பெறுவதற்கு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள், உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள், சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள், உத்தரவாதத்தினால் வரையறுக்கப்பட்ட கம்பனிகள் மற்றும் கரைகடந்த கம்பனிகள் தவிர்ந்த இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளிற்காக புதியதொரு வெளிநாட்டு வர்த்தக கடன்படுகைத் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் தகுதிவாய்ந்த கடன்படுகையாளர்களின் பெயரில் 'வெளிநாட்டு வர்த்தக கடன்படுகை கணக்கினை' ஆரம்பிக்கவும் தொழிற்படுத்தவும் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களை அனுமதிக்கின்ற பணிப்புரையொன்றும் வழங்கப்பட்டது. |
| 2016 யூன் 10 | - | பண வழங்கல் மற்றும் பிணைய முகாமைத்துவம், மதிப்பீடு மற்றும் தனிநபர்கள் அல்லது தனியார் அமைப்புகளுக்கு ஆலோசனை வழங்கலினை உள்ளடக்கிய பிணையச் சேவையினை வழங்குதல் போன்ற பகுதிகளில் வெளிநாட்டு முதலீடுகள் மீதான மேம்படுத்தப்பட்ட கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டது. |
| 2016 செத்தெம்பர் 29 | - | ஏற்றுமதி நடவடிக்கைகளை நாட்டிற்கு திருப்பி அனுப்புவதற்காக வழங்கப்பட்ட காலம் அத்தகைய பொருட்களை ஏற்றுமதி செய்யப்பட்ட திகதியிலிருந்து 120 நாட்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது. ஏதேனும் சட்டமீறலுக்கு எதிராக சட்ட நடவடிக்கைக்கு முன்பாக இலங்கை மத்திய வங்கியினால் 30 நாட்கள் கருணைக் காலம் வழங்கப்படலாம். |

## விலைத் திருத்தங்கள்

2016 பெப்புருவரி 01 - உள்நாட்டு அழைப்புக்கள் மற்றும் குறுந்தகவல் பணிகள்/ பல்லூடகத் தகவல் பணிகள் என்பனவற்றுக்கான தாழ்மட்டப் பெறுமதியானது பின்வருமாறு திருத்தப்பட்டது.

| விடயம் | | நிமிடமொன்றிற்கான தாழ்மட்டப் பெறுமதி (ரூ.) | |
|---|---|---|---|
| | | முன்னைய | புதிய |
| உள்நாட்டு அழைப்பு (நிமிடமொன்றுக்கான பட்டியல் அடிப்படையில்) | வலையமைப்பில் உள்ள | 1.00 | 1.50 |
| | வலையமைப்பில் இல்லாத | 2.00 | 1.50 |
| உள்நாட்டு அழைப்பு (செக்கனொன்றுக்கான பட்டியல் அடிப்படையில்) | வலையமைப்பிலுள்ள | 1.25 | 1.80 |
| | வலையமைப்பிலில்லாத | 2.50 | 1.80 |
| குறுந்தகவல் பணிகள்/ பல்லூடகத் தகவல் பணிகள் (தகவல் ஒன்றிற்கு) | வலையமைப்பிலுள்ள | 0.10 | 0.20 |
| | வலையமைப்பிலில்லாத | 0.25 | 0.20 |

2016 யூலை 14 - குறிப்பிட்ட சில உணவுப் பொருட்களின் ஆகக்கூடிய சில்லறை விலையானது பின்வருமாறு நிர்ணயிக்கப்பட்டது:

- மைசூர் பருப்பு (சிவப்பு பருப்பு) கி.கி ஒன்றிற்கு ரூ.169 இல்
- நெத்தலிக் கருவாடு (இறக்குமதி செய்யப்பட்டது - தாய்லாந்து) கி.கி ஒன்றிற்கு ரூ.495 இல்
- நெத்தலிக் கருவாடு (இறக்குமதி செய்யப்பட்டது - டுபாய்) கி.கி ஒன்றிற்கு ரூ.410 இல்
- கடலை கி.கி ஒன்றிற்கு ரூ.260 இல்
- பயறு கி.கி ஒன்றிற்கு ரூ.220 இல்
- தேறிய நிறை 425 கிறாம் அல்லது காய்ந்த நிறை 280 கிறாம் கொண்ட தகரத்திலடைக்கப்பட்ட மீன் (இறக்குமதி செய்யப்பட்டது) ஒன்றிற்கு ரூ.140 இலும் தேறிய நிறை 155 கிறாம் அல்லது காய்ந்த நிறை 105 கிறாம் கொண்ட தகரத்திலடைக்கப்பட்ட மீன் ஒன்றிற்கு ரூ.70 இலும்

| | | |
|---|---|---|
| | | - வெள்ளைச் சீனி கி.கி ஒன்றிற்கு ரூ.95 இல் |
| | | - கோதுமை மா கி.கி ஒன்றிற்கு ரூ.87 இல் |
| | | - முழு ஆடைப் பால்மா (இறக்குமதி செய்யப்பட்டது) 400 கிறாம் பொதியொன்று ரூ.325 இலும் 1 கி.கி பொதியொன்று ரூ.810 இலும் |
| | | - முழு ஆடைப் பால்மா (உள்நாட்டு) 400 கிறாம் பொதியொன்று ரூ.295 இலும் 1 கி.கி பொதியொன்று ரூ.735 இலும் |
| | | - குளிரூட்டப்பட்ட அல்லது பதனிடப்பட்ட இறைச்சிக் கோழி (முழுக் கோழி) தோலுடன் ரூ.410 இலும் தோல் நீக்கியது ரூ.495 இலும் |
| | | - உருளைக்கிழங்கு (இறக்குமதி செய்யப்பட்டது) கி.கி ஒன்றிற்கு ரூ.120 இல் |
| | | - பெரிய வெங்காயம் (இறக்குமதி செய்யப்பட்டது) கி.கி ஒன்றிற்கு ரூ.78 இல் |
| | | - காய்ந்த மிளகாய் (தூளாக்கப்படாத அல்லது அரைக்கப்படாதவை) கி.கி ஒன்றிற்கு ரூ.385 இல் |
| | | - கருவாடு - கட்டா கி.கி ஒன்றிற்கு ரூ.1100 இல் |
| | | - கருவாடு - சலயா கி.கி ஒன்றிற்கு ரூ.425 இல் |
| | | - சஸ்டோஜன் 400 கிராம் பொதியொன்று ரூ.1500 இல் |
| | | - மாசிக் கருவாடு கி.கி ஒன்றிற்கு ரூ.1500 இல் |
| 2016 ஓகத்து 01 | - | பயணிகள் பேருந்துக் கட்டணம் 6 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டது. குறைந்தபட்ச பேருந்துக் கட்டணம் ரூ.8 இலிருந்து ரூ.9 ஆக அதிகரிக்கப்பட்டது. |
| 2016 ஒத்தோபர் 21 | - | 2016ஆம் ஆண்டின் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை (விலைகளின் மீதான உச்சவரம்பு) விதிமுறை இல. 2 தெரிந்தெடுக்கப்பட்ட 48 மருந்துப் பொருட்களின் ஆகக் கூடிய சில்லறை விலைகளின் மீது விதிக்கப்பட்டது. |
| 2016 நவெம்பர் 29 | - | 12.5 கி.கி திரவப் பெற்றோலிய வாயு உருளையின் விலை ரூ.25 இனால் ரூ.1,321 இற்கு குறைக்கப்பட்டது. |
| 2017 சனவரி 09 | - | மண்ணெண்ணெயின் சில்லறை விலையானது ரூ.5 இனால் லீற்றரொன்றிற்கு ரூ.44 இற்கு குறைக்கப்பட்டது. |
| 2017 சனவரி 27 | - | குறிப்பிட்ட சில பொருட்களின் ஆகக்கூடிய சில்லறை விலையானது பின்வருமாறு திருத்தப்பட்டது: |
| | | - மைசூர் பருப்பு (சிவப்பு பருப்பு) கி.கி ஒன்றிற்கு ரூ.159 இல் |
| | | - நெத்தலிக் கருவாடு (இறக்குமதி செய்யப்பட்டது - தாய்லாந்து) கி.கி ஒன்றிற்கு ரூ.490 இல் |
| | | - நெத்தலிக் கருவாடு (இறக்குமதி செய்யப்பட்டது - துபாய்) கி.கி ஒன்றிற்கு ரூ.405 இல் |
| | | - பயறு கி.கி ஒன்றிற்கு ரூ.205 இல் |
| | | - வெள்ளைச் சீனி கி.கி ஒன்றிற்கு ரூ.93 இல் |
| | | - உருளைக்கிழங்கு கி.கி ஒன்றிற்கு ரூ.115இல் |
| 2017 பெப்புருவரி 08 | - | அரிசி வகைகளின் ஆகக்கூடிய சில்லறை விலையானது பின்வருமாறு திருத்தப்பட்டது: |
| | | - சம்பா அரிசி கி.கி ஒன்றிற்கு ரூ.80 இல் |
| | | - நாடு அரிசி கி.கி ஒன்றிற்கு ரூ.72 இல் |
| | | - பச்சை அரிசி கி.கி ஒன்றிற்கு ரூ.70 இல் |
| 2017 பெப்புருவரி 17 | - | அரிசி வகைகளின் ஆகக்கூடிய சில்லறை விலையானது பின்வருமாறு நிர்ணயிக்கப்பட்டது: |

| அரிசியின் வகை | உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் அரிசி ஆகக்கூடிய சில்லறை விலை (கி.கி ஒன்றிற்கு) | இறக்குமதி செய்யப்படும் அரிசி ஆகக்கூடிய சில்லறை விலை (கி.கி ஒன்றிற்கு) |
|---|---|---|
| சம்பா அரிசி (கீரிசம்பா, சூதுரு சம்பா தவிர்ந்த) | 90 | 80 |
| நாடு அரிசி | 80 | 72 |
| பச்சை அரிசி (கெக்குலு) | 78 | 70 |

- 2017ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க மருத்துவ உபகரணங்கள் விலை குறித்தல் ஒழுங்கு விதிகள் சட்டத்தின் கீழ் மருத்துவ உபகரணங்களிற்கான ஆகக்கூடிய சில்லறை விலை நிர்ணயிக்கப்பட்டது.

2017 மாச்சு 14 - வெள்ளைச் சீனி மற்றும் குளிரூட்டப்பட்ட அல்லது பதனிடப்பட்ட தோலுடன் மற்றும் தோல் நீக்கிய இறைச்சிக் கோழி (முழுக் கோழி) மீதான ஆகக்கூடிய சில்லறை விலை நீக்கப்பட்டது.

## வரி திருத்தங்கள்

### தனியாள் வருமான வரி

அடுத்து வருபவை - தனிநபர் வருமான வரி வீதம் பின்வருமாறு திருத்தியமைக்கப்படுகிறது:

- தொழில்வாய்ப்பிலிருந்தான இலாபம் மற்றும் வருமானம்

  (அ) தொழில்வாய்ப்பின் மீதான வரி விலக்கின் உச்ச எல்லையினை ஆண்டொன்றிற்கு ரூ.750,000 இலிருந்து ரூ.1.2 மில்லியனுக்கு அதிகரித்தல்.[2]

  (ஆ) இரண்டாவது தொழில்வாய்ப்பின் மீது பிரயோகிக்கத்தக்க வீதத்தினை திருத்தியமைத்தல்.

  - கொடுப்பனவுகள் மாதம் ஒன்றிற்கு ரூ.50,000 தினை விட அதிகமாகாவிடில், 10 சதவீதப்படி
  - கொடுப்பனவுகள் மாதம் ஒன்றிற்கு ரூ.50,000 இற்கும் அதிகமானால், 20 சதவீதப்படி

- தொடர்ச்சியான வீதக் கட்டமைப்பானது 4 சதவீதத்திலிருந்து 24 சதவீதம் வரையான ஒவ்வொன்றும் ரூ.600,000 சமமான வரி அடுக்குகளைக் கொண்டது.
- தொழில்வாய்ப்பிலிருந்தான இலாபங்கள் மற்றும் வருமானங்கள் மீதான விலக்குகள் பின்வருமாறு நீக்கப்பட்டது.
  - போக்குவரத்தினை வழங்குதல் மீது
  - சிறப்பு வகை பொதுப் பணிகளுக்கு குறிப்பிட்ட சிறப்புப் படிகள் வழங்கப்பட்டது.

### கம்பனி வருமான வரி

அடுத்து வருபவை - வருமான வரி வீதங்கள் பின்வருமாறு திருத்தியமைக்கப்படுகிறது:

- கம்பனி வருமான வரியினை 14 சதவீத குறைந்த வீதம், 28 சதவீத நியம வீதம் மற்றும் 40 சதவீத உயர் வீதமாக 3 அடுக்கு கட்டமைப்பாக பின்வருமாறு

  (அ) சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சி[3], பொருட்கள் அல்லது பணிகளின் ஏற்றுமதிகள் வேளாண்மை மற்றும் கல்வி போன்றவற்றிற்கு இலாபம் மற்றும் வருமானத்திற்கு 14 சதவீத குறைந்தபட்ச வீதம் பிரயோகிக்கப்படும்.

  (ஆ) பந்தயம் மற்றும் கேளிக்கை விளையாட்டு, மதுபானம் மற்றும் புகையிலை போன்றவற்றின் இலாபம் மற்றும் வருமானத்திற்கு 40 சதவீத உயர்வீதம் பிரயோகிக்கப்படும்.

---

2 தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கான கழிப்பனவுகள் இதற்கமைய சீராக்கப்படும்.

3 இத்தகைய நோக்கங்களுக்கான சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சி என்பது ஆகக்கூடிய புரள்வு ஆண்டொன்றிற்கு ரூ.500 மில்லியன் வரையறை உடைய சிறப்பு வகைகளுடன் வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளது.

(இ) வங்கித் தொழில் மற்றும் நிதியியல், காப்புறுதி, குத்தகை மற்றும் தொடர்பான செயற்பாடுகள் உள்ளடங்கலாக அனைத்து ஏனைய துறைகளின் இலாபம் மற்றும் வருமானத்தின் மீது 28 சதவீத நியம வீதம் பிரயோகிக்கப்படும்.

- நிதியங்கள் (ஊ.சே.நி., ஊ.ந.நி. போன்றவை) தொண்டு நிறுவனங்கள், பங்கிலாபங்கள், திறைசேரி முறிகள் மற்றும் திறைசேரி உண்டியல்கள் மற்றும் ஏதேனும் ஏனைய துறைகள் மீது பிரயோகிக்கத்தக்க வருமான வரியினை 10 சதவீதத்திலிருந்து 14 சதவீதத்திற்கு அதிகரித்தல்.

- பின்வரும் வருமான வரி விலக்கல்கள் நீக்கப்படுகின்றன:
  - பட்டியலிடப்பட்ட பிணையங்கள் (கம்பனி படுகடன் பிணையங்கள் போன்ற) மற்றும் ஏனைய கருவிகள் மீதான முதலீட்டிலிருந்தான குறிப்பிடத்தக்க பங்கிலாபங்கள் மற்றும் வட்டி அல்லது இலாபம்
  - கம்பனி துறைக்கான பரஸ்பர நிதியங்கள் மற்றும் கூறு நம்பிக்கை அலகின், அலகு உடமையாளரால் பெறப்பட்ட பங்கிலாபங்கள்.
  - ஒரு மாதத்திற்கு ரூ.5,000 வரையான சேமிப்புக் கணக்குகள் மீதான வட்டி.
  - ஒரு வருடத்திற்கு ரூ.1.5 மில்லியனுக்கு வரையறுக்கப்பட்ட மூத்த பிரசைகளுக்கான வைப்புக்கள் மீதான வட்டி.

- எந்தவொரு வர்த்தகம் அல்லது வியாபாரத்தின் வருமான வரி மீது முதலீட்டு ஊக்குவிப்புக்கள் பின்வருமாறு வழங்கப்பட்டன.
  - 250 வேலைவாய்ப்புக்களுக்கு குறையாததும் ஐ.அ.டொலர் 3 மில்லியனுக்கு குறையாததுமான நிலையான சொத்துக்களிலான முதலீடுகள் மீது 100 சதவீத மூலதனப் படிகள்
  - மேலே குறிப்பிட்ட நிபந்தனைகளுடன் வட மாகாணத்தில் முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டால் 200 சதவீத மூலதனப் படிகள்
  - முதலீடானது ஐ.அ.டொலர் 5 மில்லியனுக்குக் குறையாமல் மற்றும் குறைந்தபட்ச தொழில்வாய்ப்பு 300ஆக இருக்குமெனில், 100 சதவீத மூலதனப் படிகள் மற்றும் வர்த்தக தொழிற்பாட்டின் இரண்டாவது வருடத்திற்கு ஆகக்கூடிய வரி கொடுப்பனவாக வரவிடப்பட்ட வரியாக முதலீட்டின் 5 சதவீதம்.

- ஏதாவது வர்த்தகம் அல்லது வியாபாரத்தினது வருமான வரியின் மீது பின்வரும் குறிப்பிட்ட சலுகைகளை வழங்குதல்.
  - குறைந்தபட்ச தொழில்வாய்ப்பு 500 உடன் ஐ.அ.டொலர் 100 இலும் குறையாத ஏதாவது முதலீடு அல்லது
  - ஐ.அ.டொலர் 500 மில்லியனிலும் குறையாத ஏதாவது முதலீடு.

- 2016/17இன் மிகையான இலாபத்திற்கு பங்களிப்புச் செய்வதற்கு 75 சதவீதத்திற்கு சமனான வருமான வரியினை தள்ளுபடி செய்தல், இங்கு 2015/16 உடன் ஒப்பிடுகையில் 2016/17இல் 15 சதவீதம் அல்லது மேலதிகமாக வெளிநாட்டு நாணய ஏற்றுமதியிலிருந்தான வருமானம் அதிகரித்தது.

- பின்வருமாறு மூலதனப் படிகள் திருத்தியமைக்கப்பட்டது:
  - கருவி, பொறிகள் அல்லது உபகரணங்களின் வீதங்கள் 33 1/3 சதவீதம், 50 சதவீதம் மற்றும் 100 சதவீதத்திலிருந்து 20 சதவீதத்திற்கு (5 சமமான தவணைக் கட்டணங்கள்)
  - கட்டடங்கள் 10 சதவீதத்திலிருந்து 5 சதவீதத்திற்கு (20 சமமான தவணைக் கட்டணங்கள்)

**பிடித்து வைத்தல் வரி**

அடுத்துவருபவை

- வட்டி வருமானத்தின் மீதான பிடித்து வைத்தல் வரி 5 சதவீதத்திற்கு அதிகரித்தல்.
- மாதமொன்றுக்கு ரூ.50,000 இற்கு மேற்பட்ட குறிப்பிட்ட கட்டணங்களுக்கான பிடித்து வைத்தல் வரி அறிமுகப்படுத்தப்படல்.

- வெளிப்படையான வரிக்கு உட்படுத்தப்பட்ட கருவிகளான திறைசேரி உண்டியல், திறைசேரி முறிகள் அல்லது தேறிய வட்டி வீதத்தின் மீதான கம்பனி படுகடன் பிணையங்கள் போன்றவற்றின் மீதான வருவாய் மற்றும் உத்தேச வரி கொடுகடன் தீர்க்கப்படல்.

### கால எல்லை ஏற்பாடுகள்

அடுத்து வருபவை - மதிப்பீடு மற்றும் மேன்முறையீடு தொடர்பான நேர எல்லை ஏற்பாடுகள் பின்வருமாறு திருத்தியமைக்கப்பட்டது

- மதிப்பீடுகளை வழங்குதலுக்கு 18 மாதங்களிலிருந்து 09 மாதங்கள்
- ஆணையாளர் நாயகத்திற்கான மேன்முறையீடுகளை கேட்டலுக்கு 24 மாதங்களிலிருந்து 06 மாதங்கள்
- வரி மேன்முறையீடு ஆணையகத்தில் மேன்முறையீட்டினை கேட்டலுக்கு 24 மாதங்களிலிருந்து 06 மாதங்கள்

### பொருளாதார பணிக் கட்டணம்

2016 ஏப்பிறல் 01 - பொருளாதார பணிக் கட்டணத்தின் மீதான திருத்தங்கள் பின்வருமாறு செய்யப்பட்டன:

- இலாபம் உழைக்கும் வியாபாரம் மீது விலக்கல் நீக்கப்பட்டது
- ஒருவருடத்திற்கு ரூ.120 மில்லியனான ஆகக்கூடிய பொறுப்பு நீக்கப்பட்டது.
- வீதமானது 0.25 சதவீதத்திலிருந்து 0.5 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது.
- 2016 ஏப்பிறல் 01 இலிருந்து ஆரம்பிக்கின்ற ஏதேனும் காலப்பகுதிக்காக செலுத்தப்படவேண்டிய வருமான வரிக்கு எதிராக ஈடு செய்யப்பட வேண்டி பொருளாதார சேவைக் கட்டணத்தினை, முன்னோக்கி கொண்டு செல்லும் காலப்பகுதியானது 5 வருடத்திலிருந்து 3 வருடத்திற்கு குறைக்கப்பட்டது.
- காலாண்டிற்கான மொத்தப் புரள்வு ரூ.50 மில்லியனாக இருக்கும் பட்சத்தில் பெற்றோல், டீசல் மற்றும் மண்ணெண்ணை போன்றவற்றின் சில்லறை வியாபாரத்திற்கு பொருளாதார சேவைக் கட்டணத்திற்கான பொறுப்பு உருவாக்கப்படும். அத்தகைய வியாபாரத்தின் பொறுப்புக்குரிய புரள்வின் மீது 1/10இல் வரி கணக்கிடப்படும்.

அடுத்து வருபவை - பொருளாதார பணிக் கட்டணம் மீதான உச்ச எல்லை காலாண்டு ஒன்றிற்கு ரூ.50 மில்லியனிலிருந்து காலாண்டு ஒன்றிற்கு ரூ.12.5 மில்லியனுக்கு குறைக்கப்படல்.

- தங்கம், ஏனைய பெறுமதியான உலோகம் மற்றும் மோட்டார் வாகனங்களின் இறக்குமதி மீது பொருளாதார பணிக் கட்டணம் அமுல்படுத்தப்பட்டது.

### பெறுமதிசேர் வரிகள்

2016 மே 02[4] - பெறுமதிசேர் வரியின் வீதமானது 11 சதவீதத்திலிருந்து 15 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது.

- பெறுமதிசேர் வரிக்காக பதிவு செய்வதற்கான உச்சளவானது காலாண்டொன்றிற்கு ரூ.3.75 மில்லியனிலிருந்து ரூ.3 மில்லியனாகக் குறைக்கப்பட்டது.
- தொலைத்தொடர்பு சேவைகளின் வழங்கல், தொலைத்தொடர்பு சாதனங்கள் மற்றும் உபகரணங்களின் இறக்குமதி அல்லது வழங்கல், தொலைத்தொடர்பு கைத்தொழிலுக்கான செப்பு கடத்தி உட்பட உயர் தொழில்நுட்ப சாதனங்கள், தொலைத்தொடர்பு ஒழுங்கமைத்தல் ஆணைக்குழுவினால் உள்நாட்டு தொலைத் தொடர்பு செயற்பாட்டாளர்களுக்கு அனுமதி பத்திரம் வழங்கல், மற்றும் சுகாதார சேவைகள் வழங்கல் போன்றன பெறுமதி சேர் வரிக்கு கடப்பாடுள்ளதாக்கப்பட்டது.
- மொத்த விற்பனை அல்லது சில்லறை விற்பனை மீதான பெறுமதிசேரி வரி விதிப்பிற்கு ஏற்புடைத்தான காலாண்டு மொத்தப் புரள்வான ரூ.100 மில்லியன் ரூ.3 மில்லியனுக்குக் குறைக்கப்பட்டது (நடைமுறைப்படுத்தப்படவில்லை).

---

4 2016 நவெம்பர் 01 20ஆம் இலக்க பெறுமதிசேர் வரி (திருத்தம்) சட்டமூலம் சட்டமூலத்திற்கிணங்க இத்தகைய வழிமுறையானது 2016 மே 02 இலிருந்து 2016 யூலை 11 வரை செல்லுபடியானதாகக் காணப்பட்டது.

| | |
|---|---|
| 2016 நவெம்பர் 01 | - பெறுமதிசேர் வரி வீதமானது 11 சதவீதத்திலிருந்து 15 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது. |
| | - மொத்த விற்பனை அல்லது சில்லறை விற்பனை மீதான பெறுமதிசேர் வரிக்கு ஏற்புடையதான காலாண்டு புரள்வான ரூ.100 மில்லியன் ரூ.12.5 மில்லியனுக்குக் குறைவடைந்துள்ளது. |
| | - பெறுமதிசேர் வரிக்காக பதிவு செய்வதற்கான உச்சளவானது காலாண்டொன்றிற்கு ரூ.3.75 மில்லியனிலிருந்து ரூ.3 மில்லியனாக குறைக்கப்பட்டது. |
| | - தொலைத்தொடர்பு சேவைகளின் வழங்கல், தொலைத்தொடர்பு சாதனங்கள் மற்றும் உபகரணங்களின் இறக்குமதி அல்லது வழங்கல், தொலைத்தொடர்பு கைத்தொழிலுக்கான செப்பு கடத்தி உட்பட உயர் தொழில்நுட்ப சாதனங்கள், தொலைத்தொடர்பு ஒழுங்கமைத்தல் ஆணைக்குழுவினால் உள்நாட்டு தொலைத் தொடர்பு செயற்பாட்டாளர்களுக்கு அனுமதி பத்திரம் வழங்கல், மற்றும் சுகாதார சேவைகள் வழங்கல் (மருத்துவ ஆய்வாளர்களுக்கான கட்டணம், மருத்துவ ஆலோசனைகளுக்கான கட்டணம், பரிசீலனை கட்டணம் மற்றும் வைத்தியசாலை அறைகளுக்கான கட்டணங்கள் தவிர) போன்றன பெறுமதி சேர் வரிக்கு கடப்பாடுள்ளதாக்கப்பட்டது. |
| | - பின்வரும் விடயங்களின் இறக்குமதி மற்றும் வழங்கலானது பெறுமதி சேர்வரிக்கு கடப்பாடுள்ளதாக்கப்பட்டது;<br>- சிகரெட்<br>- மதுசாரம்<br>- குறைநிறையுடைய மின் மற்றும் இலத்திரனியல் பொருட்கள்<br>- வாசனைத் திரவியங்கள்<br>- நிலக்கரி<br>- தொலைத்தொடர்பு சாதனங்கள் |
| 2016 நவெம்பர் 11 | - பின்வரும் வழங்கல்கள் பெறுமதிசேர் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டன:<br>- குறிப்பிடத்தக்க எச்.எஸ். குறியீடுகளின் கீழ் அடையாளங் காணப்பட்ட மீள்புதுப்பிக்க கூடிய சக்தி உருவாக்கத்திற்கான பொறிகள், உபகரணங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள்<br>- குறிப்பிடத்தக்க எச்.எஸ். குறியீடுகளின் கீழ் அடையாளங் காணப்பட்ட இலத்திரனியல் பொருட்கள்<br>- குறிப்பிடத்தக்க எச்.எஸ். குறியீடுகளின் கீழ் இணங்காணப்பட்ட செய்தித் தாள்கள் தவிர்ந்த இதழ்கள், சஞ்சிகைகள், மற்றும் காலாந்தர வெளியீடுகள்<br>- எச்.எஸ். குறியீட்டு இலக்கம் 8421.29.10 இன் கீழ் இணங்காணப்பட்ட மருத்துவப் பொறிகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் |
| அடுத்து வருபவை | - இலங்கையில், 30 நாட்களுக்கு அதிகமாகாமல் தங்கியிருக்கும் வெளிநாட்டவர்களால் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் மீது, இத்தகைய வெளிநாட்டவர்கள் நாட்டை விட்டு வெளியேறும் வேளையில் பெறுமதிசேர் வரி பொறிமுறையினை அறிமுகப்படுத்தல். |
| | - வெளிவாரி நுழைவாயில் தொழிற்பாட்டாளர்களால் உள்நாட்டுத் தொழிற்பாட்டாளர்களுக்கு வழங்கப்பட்ட பன்னாட்டுத் தொலைத்தொடர்புச்சேவை வழங்கல் மீது பெறுமதிசேர் வரி விலக்குகள் வழங்கப்படல். |
| | - எளிமையாக்கப்பட்ட பெறுமதிசேர் வரிமுறைமையினை முடிவுறுத்தல். |

### தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி

| | |
|---|---|
| 2016 மே 02[5] | - தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியினைப் பதிவு செய்வதற்கான உச்சளவானது காலாண்டொன்றிற்கு ரூ.3.75 மில்லியனிலிருந்து ரூ.3 மில்லியனாக குறைக்கப்பட்டது. |
| | - தொலைத்தொடர்பு சேவைகள், மின்வலு வழங்கல், மசகுகள், வீடமைப்புத் திட்டம் தவிர்ந்த ஏனைய குறிப்பிடத்தக்க செயற்றிட்டங்களுக்கான பொருட்கள் மற்றும் பணிகளின் வழங்கல் போன்றவற்றிற்கான தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி விலக்கு நீக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 2016 நவெம்பர் 01 | - | தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியினைப் பதிவு செய்வதற்கான உச்சளவானது காலாண்டொன்றிற்கு ரூ.3.75 மில்லியனிலிருந்து ரூ.3 மில்லியனாக குறைக்கப்பட்டது. |
| | - | தொலைத்தொடர்பு சேவைகள், மின்வலு வழங்கல், மசகுகள், வீடமைப்புத் திட்டம் தவிர்ந்த ஏனைய குறிப்பிடத்தக்க செயற்றிட்டங்களுக்கான பொருட்கள் மற்றும் பணிகளின் வழங்கல் போன்றவற்றிற்கான தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி விலக்கு நீக்கப்பட்டது. |
| 2016 நவெம்பர் 11 | - | பின்வரும் விடயங்கள் தேசத்தை கட்டியெழுப்பும் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டன: |
| | | - குறிப்பிடத்தக்க எச்.எஸ். குறியீடுகளின் கீழ் இனங்காணப்பட்ட செய்தித் தாள்கள் தவிர்ந்த அச்சிடப்பட்ட புத்தகங்கள், இதழ்கள், சஞ்சிகைகள், மற்றும் காலாந்தர வெளியீடுகள். |
| | | - குறிப்பிடத்தக்க எச்.எஸ். குறியீடுகளின் கீழ் இனங்காணப்பட்ட சூரிய படல தொகுதிகள் மற்றும் உதிரிப்பாகங்கள் |

**கலால் தீர்வை**

| | | |
|---|---|---|
| 2016 சனவரி 01 | - | போத்தலில் அடைக்கப்பட்ட கள்ளின் மீதான தீர்வையானது லீற்றர் ஒன்றிற்கு ரூ.10 இலிருந்து லீற்றர் ஒன்றுக்கு ரூ.30 இற்கு அதிகரிக்கப்பட்டது. |
| 2016 ஏப்பிறல் 01 | - | ஏதேயில் மதுபானத்தின் இறக்குமதி மற்றும் உள்நாட்டு வழங்கல் மீதான கலால் வரி அதிகரிக்கப்பட்டது. |
| 2016 செத்தெம்பர் 01 | - | வெளிநாட்டு மதுபானம் இறக்குமதி மீதான கலால் தீர்வை பின்வருமாறு அமுல்படுத்தப்பட்டது. |
| | | - மோல்ட் மதுபானம் தொகை வடிவிலான லீற்றர் ஒன்றிற்கு ரூ.50 |
| | | - வெளிநாட்டு வைன் தொகை வடிவிலான லீற்றர் ஒன்றிற்கு ரூ.100 |
| | | - ஏனைய வெளிநாட்டு தொகை வடிவிலான மதுபானம் லீற்றர் ஒன்றிற்கு ரூ.200 |
| 2017 சனவரி 01 | - | போத்தலில் அடைக்கப்பட்ட கள்ளின் மீதான தீர்வையானது லீற்றர் ஒன்றிற்கு ரூ.30 இலிருந்து லீற்றர் ஒன்றுக்கு ரூ.50 இற்கு அதிகரிக்கப்பட்டது. |
| அடுத்து வருபவை | - | இறக்குமதி செய்யப்பட்ட காவிச்செல்ல முடியாத மதுசாரங்கள் மீதான கலால் வரி ஒரு லீற்றருக்கு ரூ.25 என அறிமுகப்படுத்தப்பட்டது. |
| | - | எதனோல் உற்பத்திக்காக பயன்படுத்தப்படும் மூலப்பொருட்கள் மீது கலால் வரி விதிக்கப்பட்டது. |

**கலால் (சிறப்பு ஏற்பாடுகள்)**

| | | |
|---|---|---|
| 2016 மே 27 | - | மோட்டார் வாகன இறக்குமதி மீதான கலால் (சிறப்பு ஏற்பாடுகள்) தீர்வையின் அலகு வீதம் திருத்தப்பட்டது. |
| 2016 ஓகத்து 20 | - | டீசல் மீதான கலால் (சிறப்பு ஏற்பாடுகள்) தீர்வை லீற்றர் ஒன்றிற்கு ரூ.3 இலிருந்து லீற்றர் ஒன்றிற்கு ரூ.13 இற்கு அதிகரிக்கப்பட்டது. |
| 2016 ஒத்தோபர் 04 | - | சிகரெட் மீதான கலால் (சிறப்பு ஏற்பாடுகள்) தீர்வையானது அதிகரிக்கப்பட்டது. |
| 2016 நவெம்பர் 11 | - | பியர் தகரக்குவளைகள் மீதான தீர்வையானது (சிறப்பு ஏற்பாடு) பின்வருமாறு அமுல்படுத்தப்பட்டது. |
| | | - 350 மில்லிலீற்றருக்கு மேற்படாத தகரக்குவளை ஒன்றிற்கான வீதம் ரூ.10 |
| | | - 350 மில்லிலீற்றருக்கு மேற்பட்டவைகளுக்கு தகரக்குவளை ஒன்றிற்கு ரூ.15 |

**சுங்கத் தீர்வை**

| | | |
|---|---|---|
| 2016 பெப்புருவரி 01 | - | அரிசி இறக்குமதி மீதான சுங்கத் தீர்வை கி.கி ஒன்றிற்கு ரூ.35 இலிருந்து கி.கி ஒன்றிற்கு ரூ.50 ஆக அதிகரிக்கப்பட்டது. |

5 2016 நவெம்பர் 07இல் சமர்ப்பிக்கப்பட்ட முறையே 2016இன் 22ஆம் இலக்க தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி (திருத்தம்) சட்டமூலத்திற்கிணங்க இத்தகைய வழிமுறையானது 2016 மே 02 இலிருந்து 2016 யூலை 11 வரை செல்லுபடியானதாகக் காணப்பட்டது.

| | | |
|---|---|---|
| 2016 பெப்புருவரி 09 | - | கோதுமை தானிய இறக்குமதி மீது வழங்கப்பட்ட முழு சுங்கத் தீர்வை விலக்கானது 15 சதவீதம் அல்லது கி.கி ஒன்றிற்கு ரூ.10 இலிருந்து கி.கி ஒன்றிற்கு ரூ.4 ஆக குறைக்கப்பட்டது. ஆகவே பிரயோகிக்கக்கூடிய தீர்வை கி.கி ஒன்றிற்கு ரூ.6 ஆகும். |
| 2016 யூன் 23 | - | டீசல் இறக்குமதி மீது வழங்கப்பட்ட சுங்கத் தீர்வை விலக்கு லீற்றர் ஒன்றிற்கு ரூ.6 ஆனது நீக்கப்பட்டது. ஆகவே பிரயோகிக்கக்கூடிய தீர்வை லீற்றர் ஒன்றிற்கு ரூ.15 ஆகும். |
| 2016 யூலை 15 | - | பால் மா இறக்குமதி மீதான சுங்கத் தீர்வை விலக்கு கி.கி ஒன்றிற்கு ரூ.90 ஆக வழங்கப்பட்டது. ஆகவே பிரயோகிக்கக்கூடிய தீர்வை கி.கி ஒன்றிற்கு ரூ.135 ஆகும். |
| 2016 ஓகத்து 13 | - | பொலிபுரொப்பலீன் பைகள் இறக்குமதி மீதான சுங்கத் தீர்வை கி.கி ஒன்றிற்கு ரூ.15 அமுலாக்கப்பட்டது. |
| 2016 ஓகத்து 25 | - | ஏதேயில் மதுபானத்தின் இறக்குமதி மீதான சுங்கத் தீர்வை லீற்றர் ஒன்றிற்கு ரூ.400 இலிருந்து லீற்றர் ஒன்றிற்கு ரூ.500 இற்கு அதிகரிக்கப்பட்டது. |
| 2016 செத்தெம்பர் 15 | - | கோதுமை தானியம் மீதான சுங்கத் தீர்வை விலக்கு கி.கி ஒன்றிற்கு ரூ.4 ஆனது நீக்கப்பட்டதுடன் கோதுமை தானிய இறக்குமதி மீது பிரயோகிக்கக்கூடிய சுங்கத் தீர்வை 15 சதவீதம் அல்லது கி.கி ஒன்றிற்கு ரூ.10 ஆனது 15 சதவீதம் அல்லது கி.கி ஒன்றிற்கு ரூ.12 ஆக அதிகரிக்கப்பட்டது. |
| 2016 நவெம்பர் 11 | - | பால் மா இறக்குமதி மீதான சுங்கத் தீர்வை விலக்கானது கி.கி ஒன்றிற்கு ரூ.90 இலிருந்து ரூ.125 இற்கு அதிகரிக்கப்பட்டது. ஆகவே பிரயோகிக்கக்கூடிய தீர்வையானது கி.கி ஒன்றிற்கு ரூ.100 ஆகும். |
| | - | அரிசி மீதான சுங்கத் தீர்வையானது கி.கி ஒன்றிற்கு ரூ50 இலிருந்து 30 சதவீதம் அல்லது கி.கி ஒன்றிற்கு ரூ50 இற்கு திருத்தியமைக்கப்பட்டது. |
| 2016 திசெம்பர் 10 | - | கோதுமை தானிய இறக்குமதி மீதான சுங்கத் தீர்வை விலக்கானது கி.கி ஒன்றிற்கு ரூ.3 வழங்கப்பட்டது. ஆகவே பிரயோகிக்கக்கூடிய தீர்வையானது கி.கி ஒன்றிற்கு ரூ.9 ஆகும். |
| 2016 திசெம்பர் 20 | - | பால் மா இறக்குமதி மீதான சுங்கத் தீர்வை விலக்கானது கி.கி ஒன்றிற்கு ரூ.125 இலிருந்து கி.கி ஒன்றிற்கு ரூ.180 ஆக அதிகரிக்கப்பட்டது. ஆகவே பிரயோகிக்கக்கூடிய தீர்வையானது கி.கி ஒன்றிற்கு ரூ.45 ஆகும். |
| 2017 பெப்புருவரி 01 | - | டீசல் இறக்குமதி மீதான சுங்கத் தீர்வை விலக்கானது லீற்றர் ஒன்றிற்கு ரூ.3 ஆக விதிக்கப்பட்டது. ஆகவே பிரயோகிக்கக்கூடிய தீர்வை லீற்றர் ஒன்றிற்கு ரூ.12 ஆகும். |
| | - | பெற்றோலிய இறக்குமதி மீதான சுங்கத் தீர்வை விலக்கானது லீற்றர் ஒன்றிற்கு ரூ10 ஆக விதிக்கப்பட்டது. ஆகவே பிரயோகிக்கக்கூடிய தீர்வை லீற்றர் ஒன்றிற்கு ரூ.25 ஆகும். |

**சுங்க மதிப்பீடுகள்**

2016 மாச்சு 01 - மோட்டார் வாகனங்களின் சுங்கப் பெறுமதிகளை கணிப்பதற்கு உற்பத்தியாளரால் அளிக்கப்பட்ட விலையை அடிப்படையாகக் கொண்ட சுங்க பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்பட்ட சுங்கப் பெறுமதிகளை பயன்படுத்துவதற்கு பதிலாக, 2016 மாச்சு 01 இல் வழங்கப்பட்ட இலக்கம் 1956/17 (விடயம் i) வர்த்தமானியால் கீழேயுள்ள (அ) மற்றும் (ஆ) எனும் இரு பதிலீட்டுப் பெறுமதிகளின் உயர்ந்தது பிரயோகிக்கப்பட்டது

(அ) வாகனப் பெறுமதியானது அத்தகைய வாகனத்தின் உற்பத்தியாளரினால் வழங்கப்பட்ட விலையின் அடிப்படையில் சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்பட்டது.

(ஆ) வாகனத்தின் மதிப்பு வாரியம் மீதான இலவசப் பட்டியல்

2016 மே 26 - 2016 மே 25 இல் வெளியிடப்பட்ட வர்த்தமானி இல. 1968/11 இன் மூலம் 2016 மாச்சு 1 இல் வெளியிடப்பட்ட வர்த்தமானி இலக்கம் 1956/17 நீக்கப்பட்டதுடன் மோட்டார் வாகனங்களின் சுங்கப் பெறுமதி கணக்கீட்டு முறையானது (வகை (i)) பின்வருமாறு திருத்தப்பட்டது:

(அ) புதியரக மோட்டார் வாகனங்களின் கொடுக்கல் வாங்கல் பெறுமதியானது உற்பத்தியாளரால் வழங்கப்பட்ட பட்டியலுடன் நிரூபிக்கப்படல் வேண்டும் அல்லது அத்தகைய வாகனங்களின் உற்பத்தியாளரால் சான்றுப்படுத்தப்படல் வேண்டும்.

(ஆ) ஏனைய மோட்டார் வாகனங்களின் கொடுக்கல் வாங்கல் பெறுமதியானது ஒத்த அல்லது அத்தகைய வாகனத்தினை ஏற்றுமதி செய்யும் நாட்டில் குறிப்பிட்ட புதிய ரக வாகனத்தின் கொடுக்கல் வாங்கல் பெறுமதியின் 82.5 சதவீதத்திற்கு குறைவாக இருத்தல் கூடாது.

2016 யூன் 14 - 2016 யூன் 14இல் வெளியிடப்பட்ட வர்த்தமானி இல. 1971/10 ஆல் 2016 மே 25 இல் வெளியிடப்பட்ட வர்த்தமானி இல. 1968/11 நீக்கப்பட்டதுடன் மோட்டார் வாகனத்தின் சுங்கப் பெறுமதிகளின் கணிப்பீடுகள் மீதான முறை பின்வருமாறு திருத்தப்பட்டது (வகை(i) (ஆ)):

கொடுக்கல்வாங்கல் பெறுமதியானது ஒத்த அல்லது அத்தகைய வாகனத்தினை ஏற்றுமதி செய்யும் நாட்டில் குறிப்பிட்ட புதிய ரக வாகனத்தின் கொடுக்கல்வாங்கல் பெறுமதியின் 85 சதவீதத்திற்கு குறைவாக இருத்தல் கூடாது.

மேலும், வாகனம் இலங்கைத் துறைமுகத்தினை வந்தடையும் வரையில் கொள்வனவாளருக்கு ஏற்பட்ட தரகர் கூலி மற்றும் விற்பனைத் தரகு போன்றவை (வகை (5)) மோட்டார் வாகனத்தின் சுங்கப் பெறுமதியினை கணிப்பிடுவதனை உள்ளடக்கியுள்ளது.

### செஸ் தீர்வை

2016 யூன் 15 - இறப்பர் மூலப் பொருட்கள் ஏற்றுமதி மீதான செஸ் தீர்வை கி.கி ஒன்றிற்கு ரூ.4 இலிருந்து கி.கி ஒன்றிற்கு ரூ.15 இற்கு அதிகரிக்கப்பட்டுள்ளது.

- எச்.எஸ் குறியீட்டு இலக்கங்கள் 02.01, 02.02, 02.04, 02.06, 02.07 மற்றும் 02.10 இன் கீழான இறைச்சி இறக்குமதி மீதான செஸ் தீர்வை 30 சதவீதம் அல்லது கி.கி ஒன்றிற்கு ரூ.225 இலிருந்து 15 சதவீதம் அல்லது கி.கி ஒன்றிற்கு ரூ.100 இற்கு குறைக்கப்பட்டது.

2016 ஓகத்து 24 - பீடி இலைகள் இறக்குமதி மீதான செஸ் தீர்வை கி.கி ஒன்றிற்கு ரூ.350 இலிருந்து கி.கி ஒன்றிற்கு ரூ.2000 வரை அதிகரிக்கப்பட்டது.

### சிறப்புப் பண்டத்தீர்வை

2016 சனவரி 21 - மாசிக் கருவாடு, நெத்தலிக் கருவாடு, பயறு, உழுந்து, மிளகாய், கொத்தமல்லி, மஞ்சள், உழுத்தம் மா, மற்றும் தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் போன்றவற்றின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத்தீர்வை ஆறு மாத காலப் பகுதிக்கு நீடிக்கப்பட்டது.

2016 சனவரி 29 - சோளம் மற்றும் இறுங்கு இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத்தீர்வை 10 சதவீதமானது 29 பெப்புருவரி 2016 வரை நீடிக்கப்பட்டது.

- மரக்கறி கொழுப்புக்கள் மற்றும் எண்ணெய்கள் மற்றும் அவற்றின் பகுதிகள் என்பவற்றின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத்தீர்வை கி.கி ஒன்றிற்கு ரூ.175 ஆனது 28 ஏப்பிறல் 2016 வரை நீடிக்கப்பட்டது.

2016 மாச்சு 01 - உருளைக்கிழங்கு இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத்தீர்வை கி.கி ஒன்றிற்கு ரூ.15 இலிருந்து கி.கி ஒன்றிற்கு ரூ.35 வரை நான்கு மாத காலத்திற்கு அதிகரிக்கப்பட்டது.

- பெரிய வெங்காய இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத்தீர்வை கி.கி ஒன்றிற்கு ரூ.5 இலிருந்து கி.கி ஒன்றிற்கு ரூ.25 வரை நான்கு மாத காலத்திற்கு அதிகரிக்கப்பட்டது.

2016 மாச்சு 08 - மெக்கரல் எனும் மீன், பட்டாணி, கொண்டைக்கடலை, தட்டைப் பயறு, குரக்கன், மாஜரீன், சீனி மற்றும் மரக்கறி எண்ணெய் போன்றவற்றின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத்தீர்வை ஆறு மாத காலத்திற்கு நீடிக்கப்பட்டது.

2016 ஏப்பிறல் 02 - கருவாடு, யோக்கட், வெண்ணெய்க்கட்டி, பாற் பரவற் பொருட்கள், சின்ன வெங்காயம், உள்ளி, உடன் தோடம்பழம், திராட்சைப் பழம், ஆப்பிள், நற்சீரகம், பெருஞ்சீரகம், வெந்தயம், குரக்கன் மா, நிலக்கடலை, கடுகு மற்றும் உப்பு போன்றவற்றின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத்தீர்வை ஆறு மாத காலத்திற்கு நீடிக்கப்பட்டது.

| | |
|---|---|
| 2016 மே 13 | - மரக்கறி எண்ணெய் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத்தீர்வை கி.கி ஒன்றிற்கு ரூ.20 இனால் ஆறு மாத காலப் பகுதிக்கு அதிகரிக்கப்பட்டது. |
| | - 80 சதவீதம் அல்லது அதற்கு அதிகமான கொழுப்பு உள்ளடங்கிய மாஜரீன் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத்தீர்வை கி.கி ஒன்றிற்கு ரூ.175 இலிருந்து கி.கி ஒன்றிற்கு ரூ.195 இற்கு ஆறு மாத காலத்திற்கு அதிகரிக்கப்பட்டது. |
| | - மாஜரீன் (ஏனையவை) இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத்தீர்வை கி.கி ஒன்றிற்கு ரூ.275 இலிருந்து கி.கி ஒன்றிற்கு ரூ.295 இற்கு ஆறு மாத காலத்திற்கு அதிகரிக்கப்பட்டது. |
| 2016 மே 21 | - உடன், பதனிடப்பட்ட அல்லது குளிரூட்டப்பட்ட மீன், மைசூர் பருப்பு (சிவப்பு பருப்பு), மஞ்சள் பருப்பு, பேரீச்சை மற்றும் நற்சீரகம் போன்றவற்றின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத்தீர்வை ஆறு மாத காலத்திற்கு அதிகரிக்கப்பட்டது. |
| | - சின்ன வெங்காய இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத்தீர்வை கி.கி ஒன்றிற்கு ரூ.5 இலிருந்து கி.கி ஒன்றிற்கு ரூ.25 இற்கு ஆறு மாத காலத்திற்கு அதிகரிக்கப்பட்டது. |
| | - பெருஞ்சீரக இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத்தீர்வை கி.கி ஒன்றிற்கு ரூ.52 இலிருந்து கி.கி ஒன்றிற்கு ரூ.162 இற்கு ஆறு மாத காலத்திற்கு அதிகரிக்கப்பட்டது. |
| 2016 யூன் 17 | - மரக்கறி எண்ணெய் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத்தீர்வை கி.கி ஒன்றிற்கு ரூ.20 ஆல் ஆறு மாத காலத்திற்கு அதிகரிக்கப்பட்டது. |
| | - மாஜரீன் (ஏனையவை) இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத்தீர்வை கி.கி ஒன்றிற்கு ரூ.295 இலிருந்து கி.கி ஒன்றிற்கு ரூ.315 இற்கு ஆறு மாத காலத்திற்கு அதிகரிக்கப்பட்டது. |
| | - தாவர எண்ணெய் மீதான சிறப்பு பண்டத்தீர்வை கி.கி ஒன்றிற்கு ரூ.155 ஆனது ஆறு மாத காலத்திற்கு அமுல்படுத்தப்பட்டது. |
| 2016 யூலை 01 | - உருளைக் கிழங்கு மற்றும் பெரிய வெங்காய இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத்தீர்வை மூன்று மாத காலத்திற்கு நீடிக்கப்பட்டது. |
| | - சோளம் மற்றும் இறுங்கு இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத்தீர்வை 10 சதவீதமானது மூன்று மாத காலத்திற்கு அமுலாக்கப்பட்டது. |
| 2016 யூலை 19 | - மாசிக் கருவாடு, நெத்தலிக் கருவாடு, பயறு, உழுந்து, மிளகாய், கொத்தமல்லி, மஞ்சள், உழுத்தம் மா மற்றும் தகரத்திலடைக்கப்பட்ட மீன் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத்தீர்வை ஆறு மாத காலத்திற்கு நீடிக்கப்பட்டது. |
| | - சீனி இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத்தீர்வை கி.கி ஒன்றிற்கு ரூ.30 இலிருந்து கி.கி ஒன்றிற்கு ரூ.0.25 இற்கு ஆறு மாத காலத்திற்கு குறைக்கப்பட்டது. |
| 2016 ஓகத்து 20 | - பெரிய வெங்காய இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத்தீர்வை கி.கி ஒன்றிற்கு ரூ.25 இலிருந்து கி.கி ஒன்றிற்கு ரூ.40 இற்கு ஆறு மாத காலத்திற்கு அதிகரிக்கப்பட்டது. |
| 2016 ஓகத்து 25 | - உருளைக் கிழங்கு இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத்தீர்வை கி.கி ஒன்றிற்கு ரூ.35 இலிருந்து கி.கி ஒன்றிற்கு ரூ.40 இற்கு ஆறு மாத காலத்திற்கு அதிகரிக்கப்பட்டது. |
| 2016 செத்தெம்பர் 08 | - மெக்கரல் எனும் மீன், பட்டாணி, கொண்டைக்கடலை, தட்டைப் பயறு மற்றும் குரக்கன் போன்றவற்றின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத்தீர்வை ஆறு மாத காலத்திற்கு நீடிக்கப்பட்டது. |
| 2016 செத்தெம்பர் 16 | - சீனி இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத்தீர்வை ஆறு மாத காலத்திற்கு பின்வருமாறு அதிகரிக்கப்பட்டது: |
| | - வெள்ளைப் பளிங்குருவான சீனி கி.கி ஒன்றிற்கு ரூ.0.25 இலிருந்து கி.கி ஒன்றிற்கு ரூ.2 இற்கு |
| | - ஏனைய சீனி கி.கி ஒன்றிற்கு ரூ.0.25 இலிருந்து கி.கி ஒன்றிற்கு ரூ.15 இற்கு |
| 2016 செத்தெம்பர் 30 | - சிவப்பு மற்றும் மஞ்சள் பருப்பு இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத்தீர்வை ஆறு மாத காலத்திற்கு பின்வருமாறு அதிகரிக்கப்பட்டது: |

| | | |
|---|---|---|
| | | - முழுப் பருப்பு கி.கி ஒன்றிற்கு ரூ.0.25 இலிருந்து கி.கி ஒன்றிற்கு ரூ.5 இற்கு |
| | | - உடைத்த பருப்பு கி.கி ஒன்றிற்கு ரூ.0.25 இலிருந்து கி.கி ஒன்றிற்கு ரூ.10 இற்கு |
| 2016 ஒத்தோபர் 02 | - | கருவாடு, யோக்கட், வெண்ணெய்க்கட்டி, பாற் பரவற் பொருட்கள், உள்ளி, உடன் தோடம்பழம், திராட்சைப் பழம், ஆப்பிள், வெந்தயம், குரக்கன் மா, நிலக்கடலை, கடுகு மற்றும் உப்பு போன்றவற்றின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத்தீர்வை ஆறு மாத காலத்திற்கு நீடிக்கப்பட்டது. |
| 2016 நவெம்பர் 08 | - | முள்ளற்ற துண்டுகளையும் மீன் இறைச்சியையும் தவிர்ந்த உடன் அல்லது பதனிடப்பட்ட மற்றும் குளிரூட்டப்பட்ட மீன் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத்தீர்வையானது 10 சதவீதம் அல்லது கி.கி ஒன்றிற்கு ரூ.50 இல் எந்தளவு தீர்வை கூடியதோ என்பதிலிருந்து 10 சதவீதம் அல்லது கி.கி ஒன்றிற்கு ரூ.75 இல் எந்தளவு கூடியதோ என்பதாக ஆறு மாத காலத்திற்கு அதிகரிக்கப்பட்டது. |
| | - | பயறு இறக்குமதி மீதான சிறப்புப் பண்டதீர்வையானது கி.கி ஒன்றற்கு ரூ.10 இலிருந்து ரூ.40 ஆக ஆறு மாத காலத்திற்கு அதிகரிக்கப்பட்டது. |
| | - | பின்வரும் பொருட்களின் இறக்குமதி மீது சிறப்புப் பண்டத்தீர்வை விதிக்கப்பட்டது: |
| | | - மங்குஸ்தான் (உடன் மற்றும் காய்ந்த) கி.கி ஒன்றிற்கு ரூ.200 |
| | | - தோடம்பழங்கள் (காய்ந்த) கி.கி ஒன்றிற்கு ரூ.2000 |
| | | - பியர்ஸ் கி.கி ஒன்றிற்கு ரூ.175 |
| | | - ஏனைய-செறி கி.கி ஒன்றிற்கு ரூ.250 |
| | | - முந்திரிகை வற்றலும் சிலோகம் கி.கி ஒன்றிற்கு ரூ.200 |
| | | - கிவி பழம் கி.கி ஒன்றிற்கு ரூ.175 |
| | | - ஏனைய உடன் பழங்கள் எச்எஸ் தலைப்பு 0810.90.99 இன் கீழ் கி.கி ஒன்றிற்கு ரூ.200 |
| 2016 நவெம்பர் 11 | - | வெள்ளைப் பளிங்குருவான கரும்பு மற்றும் பீற் சீனி இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத்தீர்வையானது கி.கி ஒன்றிற்கு ரூ.2 இலிருந்து ரூ.7இற்கு ஆறு மாத காலப்பகுதிக்கு அதிகரிக்கப்பட்டது. |
| 2016 நவெம்பர் 21 | - | சிறிய வெங்காயம், பேரிச்சம் பழம், நற்சீரகம், மாஜரீன் மற்றும் பெருஞ்சீரகம் போன்றவற்றின் இறக்குமதிகள் மீதான சிறப்புப் பண்டத்தீர்வையானது ஆறு மாத காலப் பகுதிக்கு நீடிக்கப்பட்டது. |
| | - | உலர்த்திய திராட்சைப்பழ இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத்தீர்வையானது கி.கி ஒன்றிற்கு ரூ.230 ஆக விதிக்கப்பட்டது. |
| 2016 திசெம்பர் 10 | - | தாவர எண்ணெய் (ஏனையவை) இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத்தீர்வையானது கி.கி ஒன்றிற்கு ரூ.170 இலிருந்து ரூ.175 இற்கு ஆறு மாத காலப்பகுதிக்கு அதிகரிக்கப்பட்டது. |
| | - | ஏனைய மரக்கறி எண்ணெய் மற்றும் மாஜரீன் என்பவற்றின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத்தீர்வையானது ஆறு மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது. |
| 2016 திசெம்பர் 20 | - | சோளம் மற்றும் இறுங்கு இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத்தீர்வையானது 10 சதவீதத்திலிருந்து கி.கி ஒன்றிற்கு ரூ.10 இற்கு ஆறு மாத காலப்பகுதிக்கு திருத்தியமைக்கப்பட்டது. |
| | - | வெள்ளைப் பளிங்குருவான கரும்பு மற்றும் பீற் சீனி இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத்தீர்வையானது கி.கி ஒன்றிற்கு ரூ.7 இலிருந்து ரூ.13 இற்கு ஆறுமாத காலத்திற்கு அதிகரிக்கப்பட்டது. |
| 2017 சனவரி 07 | - | பாதியாக அரைக்கப்பட்ட அல்லது முழுமையாக அரைக்கப்பட்ட பச்சை அரிசி (ககுளு), நாடு அரிசி (சிவப்பு அல்லது வெள்ளை) மற்றும் சம்பா அரிசி (சிவப்பு அல்லது வெள்ளை) இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை கி.கி ஒன்றிற்கு ரூ.15 இற்கு மூன்று மாத காலப்பகுதிக்கு விதிக்கப்பட்டது. |
| 2017 சனவரி 19 | - | மாசிக் கருவாடு, நெத்தலிக் கருவாடு, உழுந்து, மிளகாய், கொத்தமல்லி, மஞ்சள், உழுத்தம் மா மற்றும் தகரத்திலடைக்கப்பட்ட மீன் போன்றவற்றின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத்தீர்வை ஆறு மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | - | மரக்கறி எண்ணெய் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத்தீர்வை கி.கி ஒன்றிற்கு ரூ.20இனால் ஆறு மாத காலப்பகுதிக்கு குறைக்கப்பட்டது. |
| 2017 சனவரி 28 | - | பாதியாக அரைக்கப்பட்ட அல்லது முழுமையாக அரைக்கப்பட்ட பச்சை அரிசி (ககுளு), நாடு அரிசி (சிவப்பு அல்லது வெள்ளை) மற்றும் சம்பா அரிசி (சிவப்பு அல்லது வெள்ளை) இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை கி.கி ஒன்றிற்கு ரூ.15 இலிருந்து கி.கி ஒன்றிற்கு ரூ.5 இற்கு 30 நாட்கள் காலப்பகுதிக்கு குறைக்கப்பட்டது. |
| 2017 பெப்புருவரி 17 | - | உருளைக்கிழங்கு மற்றும் பெரிய வெங்காய இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத்தீர்வை ஆறு மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது. |
| | - | சிவப்பு மற்றும் மஞ்சள் பருப்பு இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத்தீர்வை ஆறு மாத காலப்பகுதிக்கு பின்வருமாறு அதிகரிக்கப்பட்டது: |
| | | - முழுப் பருப்பு கி.கி ஒன்றிற்கு ரூ.5 இலிருந்து கி.கி ஒன்றிற்கு ரூ.10 இற்கு |
| | | - உடைத்த பருப்பு கி.கி ஒன்றிற்கு ரூ.10 இலிருந்து கி.கி ஒன்றிற்கு ரூ.15 இற்கு |
| 2017 பெப்புருவரி 24 | - | மரக்கறி எண்ணெய் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத்தீர்வை கி.கி ஒன்றிற்கு ரூ.20 இனால் ஆறு மாத காலப்பகுதிக்கு குறைக்கப்பட்டது. |
| 2017 பெப்புருவரி 27 | - | பாதியாக அரைக்கப்பட்ட அல்லது முழுமையாக அரைக்கப்பட்ட பச்சை அரிசி (ககுளு), நாடு அரிசி (சிவப்பு அல்லது வெள்ளை) மற்றும் சம்பா அரிசி (சிவப்பு அல்லது வெள்ளை) இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை 30 நாட்களுக்கு நீடிக்கப்பட்டது. |
| 2017 மாச்சு 08 | - | மெக்கரல் எனும் மீன், பட்டாணி, கொண்டைக்கடலை, தட்டைப் பயறு, குரக்கன் மற்றும் வெள்ளைப் பளிங்குருவான சீனி தவிர்ந்த ஏனைய சீனி போன்றவற்றின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத்தீர்வை ஆறு மாத காலத்திற்கு நீடிக்கப்பட்டது. |

**துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தி தீர்வை**

| | | |
|---|---|---|
| 2016 சனவரி 01 | - | துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தித் தீர்வை வீதமானது 5 சதவீதத்திலிருந்து 7.5 சதவீதமாக அதிகரிக்கப்பட்டது. |
| | - | இலத்திரனியல் மற்றும் மின்சார கருவிகள் மீதான துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தித் தீர்வையின் சலுகை வீதமானது 2.5 சதவீதத்திற்கு விதிக்கப்பட்டது. |
| | - | கட்டடவாக்கம், பால் மற்றும் வேளாண்மைக் கைத்தொழிலில் பயன்படுத்தப்படும் இயந்திரங்கள், துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தித் தீர்வையிலிருந்து விலக்களிக்கப்பட்டது. |
| 2016 நவெம்பர் 11 | - | அச்சிடப்பட்ட புத்தகங்கள், இதழ்கள், சஞ்சிகைகள் மற்றும் காலாந்தர வெளியீடுகள் மீதான துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தித் தீர்வை நீக்கப்பட்டது. |
| | - | எச்.எஸ். குறியீடுகள் இலக்கம் 3926.90.80 மற்றும் 9602.00.10 இற்கு கீழான மருந்தாக்கல் உற்பத்திகள் மீதான துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தித் தீர்வைகள் 2.5 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டது. |

**முத்திரைத் தீர்வை**

| | | |
|---|---|---|
| 2016 சனவரி 01 | - | கடனட்டையின் உள்நாட்டுப் பயன்பாட்டுக்கான ஒவ்வொரு ரூ.1000 இற்கு அல்லது அதன் பகுதிகளின் மீது அறவிடப்பட்ட ரூ.15 முத்திரைத் தீர்வையானது நீக்கப்பட்டது. |
| | - | வெளிநாட்டுக் கொள்வனவுகளுக்கான கடனட்டைப் பயன்பாட்டின் மீதான முத்திரைத் தீர்வையானது ஒவ்வொரு ரூ.1000 இற்கும் அல்லது அதன் பகுதிகளுக்கும் ரூ.25 இற்கு அதிகரிக்கப்பட்டது. |
| | - | எந்தவொரு கம்பனியினதும் எந்தவொரு எண்ணிக்கையிலான பங்குகளின் வழங்கல், மாற்றல் அல்லது ஒப்படைப்பு என்பனவற்றின் விளைவாக ஏதேனும் பங்குச்சான்றிதழ் மீதான முத்திரைத் தீர்வை நீக்கப்பட்டது. |

**புறப்படுகைத் தீர்வை**

2016 சனவரி 01 - புறப்படுகைத் தீர்வை பின்வருமாறு அதிகரிக்கப்பட்டது;

- இலங்கையிலிருந்து விமானத்தால் வெளிச்செல்லும் ஒருவருக்கு ஐ.அ. டொலர் 25 இலிருந்து ஐ.அ. டொலர் 30 இற்கு
- இலங்கையிலிருந்து கப்பலால் வெளிச் செல்லும் ஒருவருக்கு ஐ.அ. டொலர் 5 இலிருந்து ஐ.அ. டொலர் 30 இற்கு

2017 சனவரி 01 - புறப்படுகைத் தீர்வையானது ஐ.அ.டொலர் 30 இலிருந்து ஐ.அ.டொலர் 50இற்கு அதிகரிக்கப்பட்டது.

**கட்டணங்கள் மற்றும் விதிப்புக்கள்**

2016 சனவரி 01 - கடவுச்சீட்டு மற்றும் இரட்டைக் குடியுரிமைக் கட்டணம் பின்வருமாறு அதிகரிக்கப்பட்டது:

| | | முன்னையது (ரூ.) | புதியது (ரூ.) |
|---|---|---|---|
| கடவுச் சீட்டுக் கட்டணம் ஒரு நாள் சேவை | வயதுவந்தோர் | 7,500 | 10,000 |
| | சிறுவர் | 3,500 | 5,000 |
| கடவுச் சீட்டுக் கட்டணம் சாதாரண சேவை | வயதுவந்தோர் | 2,500 | 3,000 |
| | சிறுவர் | 1,500 | 2,000 |
| இரட்டை குடியுரிமைக் கட்டணம் | | 250,000 | 300,000 |

- சார்க் விசாக் கட்டணம் ஐ.அ.டொலர் 10 இலிருந்து ஐ.அ.டொலர் 20 இற்கு அதிகரிக்கப்பட்டது.

அடுத்துவருபவை
- கம்பனிகள் மீதான தன்னார்வ திரவத்தன்மைக் கட்டணம் மற்றும் ஆண்டு உரிமக் கட்டணம் விதிக்கப்படல்
- நீதிமன்றத்தில் ஏதேனும் நபரினால் நீதிமன்ற வழக்குத் தாக்கல் செய்யும் வேளையில் தாக்கல் செய்யும் கட்டணத்தினை விதித்தல்.
- உடனடி அபராதத்திற்கு உட்படுத்தும் முகமாக போக்குவரத்து குற்றங்கள் மீள் வகைப்படல்.
- சூதாட்ட நுழைவுக் கட்டணம் அகற்றப்படல்.
- பீடி இலைகளின் இறக்குமதியாளர்கள் மீதான வருடாந்த உரிமக் கட்டணம் ரூ.5 மில்லியன் விதிக்கப்பட்டது.

**ஏனையவை**

2016 சனவரி 01
- பன்னாட்டுத் தொலைத்தொடர்பு தொழிற்பாட்டாளர்கள் தீர்வையின் வீதமானது ஐ.அ.டொலர் 9 சதத்திலிருந்து ஐ.அ.டொலர் 12 சதத்திற்கு அதிகரிக்கப்பட்டது.
- வாகன உரித்து தீர்வை அறிமுகப்படுத்தப்பட்டது.
- கட்டிடக் கைத்தொழில் பிணைய நிதியத் தீர்வையானது நீக்கப்பட்டது.
- வெளிநாட்டு மதுபானத்தின் சில்லறை வியாபாரம் மற்றும் ஆகக்கூடிய அளவின் போக்குவரத்து போன்றன 7.5 லீற்றருக்கு மட்டுப்படுத்தப்பட்டது.

2016 ஓகத்து 04 - 2016ஆம் ஆண்டு 12ஆம் இலக்க தகவல் அறிவதற்கான உரிமைச் சட்டம் சட்டமூலமாக்கப்பட்டது,

- தகவலுக்கான உரிமை அல்லது அணுகலை வழங்குதல்
- அணுகல் மறுக்கப்படுவதற்கான தளத்தை குறித்துரைப்பதற்கு
- தகவல் அறிவதற்கான உரிமைகள் ஆணைக்குழுவை நிறுவுவதற்கு
- தகவல் அலுவலர்களை நியமிப்பதற்கு

அடுத்து வருபவை - வங்கிகளால் அல்லது நிதியியல் நிறுவனங்களால் மொத்தக் கொடுக்கல்வாங்கல்கள் பெறுமதியின் அடிப்படையில் நிதியியல் கொடுக்கல்வாங்கலக்கான தீர்வை 0.05 சதவீதமாக அறிமுகப்படுத்தல்.

- நாட்டுக்குள் உள்வருகின்ற வெளிநாட்டு தொலைக்காட்சி நாடகங்கள் மற்றும் சிங்களம், தமிழ் அல்லது ஏனைய மொழிகளில் மொழிமாற்றம் செய்யப்பட்டவை மீதான தொலைக்காட்சி நாடகத் தீர்வை அதிகரிக்கப்படல்.
- இணையச் சேவைகள் மீதான தொலைத்தொடர்புத் தீர்வையானது 10 சதவீதத்தில் இருந்து 25 சதவீதத்திற்கு அதிகரிக்கப்படல்
- சிம் செயற்படுத்தும் தீர்வையாக ரூ.200 விதிக்கப்படல்.
- அனைத்து கைத்தொலைபேசி தொழிற்பாட்டாளர்கள் மீதும் வழங்கப்பட்ட 6 மாத காலப்பகுதிக்குள் 3ஜி வசதியினை வழங்குவதற்கு அதனுடைய உட்கட்டமைப்பை மாற்றுவதற்கு தவறவிடும் பட்சத்தில் ஒரு மாவட்டத்திற்கு ரூ.100 மில்லியன் தண்டப்பணமாக அறவிடப்படல்.
- வருடாந்த நிறமாலைக் கட்டணம் 25 சதவீதத்தால் அதிகரிக்கப்படல்
- அசையாத சொத்துக்களை அகற்றுவதில் இருந்து உணரப்பட்ட பெறுகைகள் மீது 10 சதவீதத்தில் மூலதன பெறுகைகள் வரியாக விதிக்கப்படல்
- மின்சார கார்கள் மற்றும் இழுபொறி தவிர்ந்த வாகனங்கள் மீதான காபன் வரி விதிக்கப்படல்
- சொகுசு மற்றும் அரைச்சொகுசு உந்து ஊர்தி மீதான வரி திருத்தப்படல்.
- வேளாண்மை நோக்கத்திற்காக பயன்படும் துப்பாக்கிகள் தவிர்ந்த ஏனைய துப்பாக்கிகள் மீதான ஆண்டு உரிமக் கட்டணம் ரூ.20,000 விதிக்கப்படல்.
- மசகு, நிலக்கீழ் எண்ணெய் மற்றும் தங்கம் போன்றவற்றின் இறக்குமதி அனுமதிக்கான கட்டணம் அறவிடப்படல்.

### அரச செலவினம்

2016 பெப்புருவரி 25 - 2016 சனவரி 01 முதல் அமுலுக்கு வரும் வகையில் ஐந்து கட்டங்களாக பொதுப் பணிகளுக்கான சம்பள அளவீடுகளை அமுல்படுத்துவதற்கு பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 03/2016 வெளியிடப்பட்டது.

2016 மாச்சு 09 - நெல் வேளாண்மையாளர்களுக்கான உரமானியம் ஆண்டிற்கு ஆகக்கூடிய 2 ஹெக்டேயர்களுக்கு ஒவ்வொரு ஹெக்டேயருக்கும் ஆகக்கூடிய பணமாக ரூ.25,000 வழங்குவதற்கு சுற்றறிக்கை இல. 2016 NFS/FCG(1) வெளியிடப்பட்டது.

2016 மே 01 - 2016 சனவரி 01 இற்கு பிறகு ஓய்வுபெற்ற அலுவலர்களுக்கான புதிய காப்புறுதி திட்டமான “அக்றகாற றெக்கவறண” இனை ஸ்தாபிப்பதற்கு ஓய்வூதிய சுற்றறிக்கை இல. 4/2016 வெளியிடப்பட்டது.

2016 மே 03 - தேயிலை, தெங்கு மற்றும் இறப்பர் உரமானியத்திற்கு பதிலாக வருடமொன்றிற்கு ஹெக்டேயர் ஒன்றிற்கு முறையே ரூ.15,000 , ரூ.9,000 மற்றும் ரூ.5,000 காசு வழங்குவதற்கு ஒரு சுற்றறிக்கை வெளியிடப்பட்டது.

### படுகடன் முகாமைத்துவம்

2016 சனவரி 07 - 2016 இற்கான இலங்கை அபிவிருத்தி முறிகள் ஐ.அ.டொலர் 2,500 மில்லியன் வரையறைக்குள் வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்டது.

2016 பெப்புருவரி 16 - 01 ஓகத்து 2013இல் வழங்கப்பட்ட லங்கா செட்டில் முறைமை விதிகள் (பதிப்பு 2.1) உடன் அவர்களின் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது இணைந்து ஒழுகுகிறார்களா என்பதனை உறுதிப்படுத்துவதற்கு லங்கா செட்டில் முறைமையின் அனைத்து பங்குபற்றுநருக்கும் ‘லங்கா செகுயர் மத்திய வைப்பிடல் முறைமையில் அரச பிணையங்களின் உரிமையினைப் பதிவு செய்தல்’ மீதான சுற்றறிக்கையொன்று வழங்கப்பட்டது.

2016 மாச்சு 13 - இலங்கை அபிவிருத்தி முறிகள் மீதான ஆகக் குறைந்த முதலீட்டு தொகையானது ஐ.அ.டொலர் 100,000 இலிருந்து ஐ.அ.டொலர் 10,000 இற்கு குறைக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| 2016 ஏப்பிறல் 07 | - | உள்நாட்டு திறைசேரி உண்டியல் சட்டம், பதிவுசெய்யப்பட்ட பங்கு மற்றும் பிணையங்கள் சட்டம் மற்றும் வேறு தேவையான ஒழுங்குகள் மற்றும் சட்டங்களினதும் அடிப்படையில் முதலாந்தர வணிகர்கள் மற்றும் ஏனைய பங்குபற்றுநர்களுடன் தொடர்பான பொதுப் படுகடன் கண்காணிப்பாளர்/ பதிவாளரினால் இதுவரை வெளிக் கொண்டுநடாத்தப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் ஒழுங்குகளும் மேற்பார்வை தொழிற்பாடுகளும் இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களை மேற்பார்வை செய்யும் திணைக்களப் பணிப்பாளருக்கு ஒப்படைக்கப்பட்டது. |
| 2016 ஓகத்து 01 | - | இலங்கைக்காக வடிவமைக்கப்பட்டுள்ள நிலையான வருமான மேற்கோள அடிப்படையிலான புளும்பேர்க் வர்த்தகக் கட்டமைப்பினை பயன்படுத்துமாறு அனைத்து முதனிலை வணிகர்களையும் கேட்டுக்கொள்ளும் சுற்றறிக்கையின் வழங்கல்;<br><br>- முதனிலை வணிகர்களுக்கு இடையேயான அனைத்து உடனடி வர்த்தகத்தை மேற்கொள்வதற்கு<br><br>- வட்டி அறிக்கை வீதங்கள் மற்றும் அனைத்து உடனடி வர்த்தக அளவுகள், ஒவ்வொரு வர்த்தகத்தின் 30 நிமிடத்திற்குள்ளும் முதனிலை வணிகரல்லாத முதலீட்டாளருடன் ரூ.50 மில்லியனிற்கும் மேற்பட்ட கொடுக்கல் வாங்கல் நடைபெறும் இடத்திலேயே மேற்கொள்ளப்பட்டது. |